அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."

TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்
ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் VI.] MARCH & JUNE, 1906-ஸு மார்ச்சு—ஜூன். [இலக்கம் 1,2.

ஜீவகாருணியப் பயிற்சி.

ஒரு புதுமையான புத்தகம்.

ஜீவஜந்து பரிசோதனை சாஸ்திரத்தில் பூரண பண்டிதராகி அதே சாஸ்திரத்தை வித்யார்த்திகளுக்குப் போதிக்கும் உத்தியோகத்தை மேற்கொண்டிருக்கிற ஜே. ஹவர்டு மூர் என்னும் துரையானவர், இப்பூமண்டலத்திலுள்ள ஸகல பிராணிகளும் ஒன்றுக்கொன்று எல்லாவிதத்திலும் ஒரே தன்மையான ஸம்பந்தமுள்ளனவா யிருக்கின்றன என்பதைப்பற்றி, யாவருக்கும் நற்புத்தியும் இனிப்பு முண்டாக்கத்தக்கதாய், அற்புதமான புத்தகமொன்று எழுதிப் பிரசுரம் செய்திருக்கிறார். அந்தப் புத்தகம் மூன்று பிரிவாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. அவை உடலொற்றுமை, உயிரொற்றுமை, அறிவொற்றுமை என்பவையாம். நமக்குக் கைவசமான உடன்பிறப்புகளாய்ப் பூமியிலும் வானத்திலுமுள்ள ஸகல ஜீவராசிகளிடத்திலும் அன்பும் அருளுமுடையவர்களா யிருப்பவர்கள்கூட, மனித ஜாதிக்கும் அவர்கள் அற்ப ஜந்துக்களென்று துணிந்து சொல்லுகிற மற்ற ஜீவகோடிகளுக்கும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் பலவிதத்திலும் மிகவும் நெருங்கியிருக்கிறதென்பதைக் கேட்டால், மிகவும் ஆச்சரியப்படுவார்கள். அது யாவரும் கொண்டாடத்தக்க புத்தகமென்பதும், விசேஷமாகப் படித்து நுட்பமாய் ஆராய்ச்சிசெய்து எழுதிய புத்தகமென்பதும் அதைப் படிப்பவர்களுக்கு நன்றாய் விளங்கும்.

உடல் ஒற்றுமை.

வாயில்லா ஜந்துக்களுக்கு மனிதனைப்போல நோயும் வருத்தமு மில்லையென்று வீண்வாதம் செய்பவர்கள் இந்தப் புத்தகத்தை அவசியம் படிக்க வேண்டும். மூர் துரை சொல்வதாவது,—"சரீரத்தில் எலும்புக்கூடு, மனிதர்களுக்கு எந்த ஏற்பாட்டின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறதோ, அதே ஏற்பாட்டின்மேலேதான் முதுகெலும்புள்ள ஸகல பிராணிகளுக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. எல்லாப்பிராணிகளுக்கும் பெரிய முதுகெலும்பு மூளையோடு ஸம்பந்தப்பட்டுத் தலையிலே தொடங்கி நடு முதுகுவழியே ஓடுகிறது; கைகால் முதலிய கர்மேந்திரிய நாடிகளும், கண் காது முதலிய ஞானேந்திரிய நாடிகளும் அம்முதுகெலும்பினின்றும் கிளைத்துத் தேகத்தில் எல்லாவிடங்களிலும் பரவியிருக்கின்றன. இவை தவிரவும், எறும்பு முதல் எண்ணாயிரங்கோடி ஜீவவர்க்கங்களுக்கும் சுக துக்கங்களை உணர்த்துகிற ஒரேதன்மையான நரம்புக்கூடும் ஒன்றிருக்கிறது" என்று உடல் ஒற்றுமையைப்பற்றிச் சொல்லுகிறார்.

உயிர் ஒற்றுமை.

உயிர் ஒற்றுமையைப்பற்றிச் சொல்வதாவது,—"நம்முடைய வயல்களிலும் வீட்டு வெளிப்புறங்களிலும் தோட்டம் தோப்புகளிலும் வசிக்கின்ற வாயில்லா ஜீவன்களுடன் பழகி அவற்றின் சுவபாவங்களை நாம் சிறிதும் தெரிந்துகொள்ளாமல் இருக்கிறோம்; அவற்றின் சுவபாவமும் மனநிலையும் இப்

படிப்பட்டவை யென்பது நமக்குச்சிறிதளவும் தெரியாது. அவை நம்மைச் சூழ்ந்துகொண்டு நமக்கு நல்ல துணையாய் நம்முடனே வாழ்ந்துகொண்டிருந்தும், அவை நமக்கு த்வீபாந்தரத்து ஜீவன்கள்போலவே இருக்கின்றன. அவைகளைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாதென்னலாம். அவைகளுடன் நாம் பழகுவது நமக்கு உபயோகமானது தானு என்று நினைக்கவும் நாம் சிறிதும் முயல்வதில்லை. அப்படியிருக்க, அவைகளைப்பற்றி நாம் படித்துத் தெரிந்துகொள்வதற்கு வகையேது? ஆகவே, வாயில்லா ஜந்துக்கள் மனிதர்களைப்போல் அல்லாமல் முற்றும் மாறுபட்டவை யென்றும், ஆகையால் அதைப்பற்றி ஆலோசனைசெய்ய நமது பிரம்மாண்டமான மண்டையை நாம் வருத்தவேண்டிய அவசியமில்லையென்றும், அவை நமது கைக்கு எட்டினுல் கண்டபடி உபயோகிக்கவேண்டுவதும், வழியே போனுல் அடித்து இம்சிப்பதும்மாத்திரமே நாம் செய்யவேண்டிய காரியமென்றும், இப்படிப்பட்ட பொய்களிலேயே பழகி நாம் பெரியவர்களாய் வளர்ந்துபோனேம்; சற்று நிதானித்து ஆலோசிப்போமானுல், நம்முடைய உயிரும் மற்றப்பிராணிகளுடைய உயிரும் ஒரே தன்மையானவை யென்பது நமக்கு நன்ருக விளங்கும்" என்று அவர் எழுதுகிருர்.

சுகதுக்கங்களால் மனம் மாறுபடுதல்.

இன்சொல், கடுஞ்சொல், அச்சம், ஆச்சரியம், விருப்பு, வெறுப்பு, பக்ஷம், பகை, செருக்கு, விநோதம், விளையாட்டு, கோபதாபம், பொறுமை, பொருமை, இரக்கம், மயக்கம், முயற்சி, மோஹம், மகிழ்ச்சி, வெட்கம், வெருட்சி, சுகம், துக்கம், பரிதாபம், உற்சாகம், இகழ்ச்சி, புகழ்ச்சி முதலானவைகளால் உண்டாகிற மனக்கலக்கம் மனிதர்களுக்குப்போலவே மற்றப் பிராணிகளுக்கு முண்டென்று மூர் துரை முறையிட்டுச் சொல்லுகிருர்; தாம் சொன்னது உண்மையென்று நிரூபித்துக்காட்ட, பலரும் பிரீதியுடன் விரும்பத்தக்க திருஷ்டாந்தங்களும் அநேகம் சொல்லியிருக்கிருர். "நாய்க்குட்டி, முயல் முதலான ஜந்துக்கள் மிகவும் பயந்து விலாப்புறங்கள் துடிப்பதைக் கண்ணுல் கண்டவர்கள், அந்தப் பிராணிகளுக்கு அச்சத்தினுல் அதிகமான உபத்திரவம் உண்டென்பதைப் பற்றிச் சிறிதளவேனும் சந்தேகப்படுவார்களோ? வாலில்லாக் குரங்குகள் திடீரென்று தம் எதிரில் பாம்புகளைக் கண்டால், அப்படியே மூர்ச்சைபோய் விழுகின்றனவாம்; பாம்புகளைக் கண்டால் அவைகளுக்கு அச்சம் அவ்வளவு அதிகம். மிகவும் கூச்சமுள்ள பக்ஷிகளான கிளிகள் அதிகமான பயமுண்டானுல், உடனே மெய்மறந்து தாம் உட்கார்ந்திருக்கும் கிளைகளிலிருந்து கீழே விழுந்துவிடுகின்றன. குதிரையும் மற்றப் பிராணிகளைப்போலவே பயப்படுகிற பிராணிதான்; ஆனுலும், ஸாதாரண ஜந்துக்களைப்போல் அது அப்படி அடிக்கடி மனங் கலங்குவதில்லை; ஏதோ ஒவ்வொரு ஸமயத்திலே தான் பயந்து மூர்ச்சையடைகிறது" என்று இப்படிப் பல திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டியிருக்கிருர்.

போர்க்களத்தில் விளங்கிய யஜமானபக்தி.

நெப்போலியன் என்னும் பிராஞ்சிய சக்கரவர்த்தி பெரும்போர் ஒன்று நடத்தி முடிந்தபிறகு குதிரைமே லேறிக்கொண்டு போர்க்களத்தைப் பார்க்கச் சென்ருர். அந்தப் போரில் நேரிட்ட உயிர்ச்சேதத்திற்கு அளவில்லை. அந்தப்போர்க்களத்தைப் பார்த்துக்கொண்டு போனபொழுது மிகவும் மனக்கிலேச முண்டாகும்படியான ஒலியொன்று அவர் காதில் கேட்டது. அதாவது, நாய் ஒன்று மிகவும் பரிதாபமாய் ஊளையிட்டுக்கொண்டிருந்தது. அந்த நாய் இவர்களைக் கண்டவுடனே இவர்களண்டைவந்து, தன்னுல் சாத்தியமானவரையில் குறிப்புகள் காட்டி, தன் யஜமானனுக்குத் துணைசெய்ய யாராவது தன்னேடு வரும்படி வேண்டிக்கொண்டது. அப்படியே அவர்கள் அதைப் பின்தொடர்ந்துபோனுர்கள்; தான் காவல் காத்துக்கொண்டிருந்த ஒரு பிரேதத்தண்டை அந்த நாய் அவர்களை அழைத்துக்கொண்டு போயிற்று. அந்தப் பரிதாபமான காட்சியைக் கண்டவுடனே நெப்போலியனுடைய மனதில் மிகுந்த சங்கடமுண்டாகிவிட்டது. அந்த யுத்தத்தில் நடந்த கொடுமைகள் இப்படிப்பட்டவையென்று அவனுக்கு அப்பொழுது நன்ருக விளங்கின. ஒரு காரணமுமில்லாமல் பலர் அந்தப் போரில் பிராணனைப் பறிகொடுத்ததும், ஒரு பாபமும் அறியாத சாதுக்களும், ஒத்தாசை யில்லாத எளியவர்களும் பெரிய துன்பத்தை யடைந்ததும், நெப்போலியனுடைய மனத்தை முற்றும் கலங்கச்செய்தன.

இந்த நாய் தன் யஜமானனுடனே போர்க்களத்திற்குப் போயிற்று. ஐயோ! அதில் யாவரும் இறந்துபோக, இறந்தவர்களையெல்லாம் காத்துக்கொண்டிருக்க இது ஒன்றுமாத்திரமே மிகுத்தப்பட்டதென்ருல், இதைவிடப் பரிதாபம் வேறென்னவேண்டும்?

தாய்போல வளர்க்கும் பூனைகளும் நாய்களும்.

நாய்க்குட்டியை வளர்த்த பூனை.

பிரீதியில்லாத ஜந்துவென்று பலர் பூனையைப் பழிக்கிருர்கள். பூனையினிடத்திலுள்ள ஒரு நல்ல குணம் மற்றெந்தப் பிராணியினிடத்திலு மில்லை.

அது எந்தப் பிராணியையும் தாய்போல வளர்க்கும் நல்ல குணமுடையது. கேட்பாரில்லாமல் கிடந்த வேறு பிராணிகளின் சிறு குட்டிகளை எடுத்துக்கொண்டுபோய் அநேகம் பூனைகள் தம் குட்டிபோலவே காப்பாற்றியிருக்கின்றன.

ஒரு பூனை நாலு குட்டி போட்டது. ஒருநாள் பகலில் அந்தப் பூனை சற்றே உலாவிவரும்படி தன் குட்டிகளைத் தனியேவிட்டு வெளியே போயிற்று. அது திரும்பி வரும்பொழுது ஒரு சிறு நாய்க்குட்டியைத் தன் கழுத்திலே தூக்கிக்கொண்டு வந்தது. பசியும் குளிரும் பொறுக்கமாட்டாமல், அந்த நாய்க் குட்டி அப்பொழுதே செத்துப்போவதுபோல் இருக்கவே, அதன் பரிதாபமான நிலையைப்பார்த்து மனமிரங்கிப் பூனை அதை எடுத்துக்கொண்டு வந்ததுபோலும். தன்னைப் பூனை யெடுத்துக்கொண்டு போனது நாய்க்குட்டிக்கு மிகவும் சந்தோஷமாகவேயிருந்தது. பூனை நாய்க்குட்டியைக் கொண்டு வந்த நாள்முதல் அதனிடத்தில் அதிகமான அன்பு பாராட்டித் தன் குட்டிகளிலொன்றாய் அதையும் வளர்த்துவந்ததென்று, அந்தப் பூனைக்குச் சொந்தக்காரனொருவன் சொல்லுகிறான்.

அணில் பிள்ளைகளை வளர்த்த பூனை.

நெஞ்சுருக்கமுள்ள ஒரு தாய்ப்பூனை, இரண்டு அணில் குட்டிகளைத் தன் குட்டிகள்போல வளர்த்துக் காப்பாற்றிவந்த கதையை அநேகர் வெகு ஆச்சரியமாய்ச் சொல்லுகிறார்கள். ஒரு குடியானவன் பெரிய மரமொன்றை வெட்டித் தள்ளினான். அந்த மரத்தில் அணில் ஒன்று கூடுகட்டி இருந்தது. அந்த மரம் விழுந்த அதிர்ச்சியில் கூட்டிலிருந்த தாய் தந்தைகளான அணில் பிள்ளைகள் இரண்டும் மிகவும் பயந்து தம் குட்டிகளை விட்டு அப்பால் ஓடிப்போயின. அப்பொழுது அந்தக் குட்டிகள் பிறந்து மூன்று நாளைக்குமே லாகவில்லை.

குடியானவன் அதைப்பார்த்து மனமிரங்கி அந்தக் குட்டிகளைத் தன் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போனான். அந்த வீட்டுப்பூனை அப்பொழுதுதான் நான்கு குட்டிகள் போட்டிருந்தது. குட்டிபோட்ட பூனை அணில் குட்டிகளையும் தன் குட்டிபோல வைத்துக்கொண்டு வளர்க்கப் பிரியமுள்ளதாயிருந்ததைத் தெரிந்து வீட்டுக்காரன் அவைகளை அதனிடத்தில் விட்டான். அணில் குட்டிகளைக் கண்டவுடனே பூனை அவைகளிடத்தில் அதிகமான அன்பு பாராட்டி அவைகளை வெகு கருத்தாய்க் காப்பாற்றிக்கொண்டுவந்தது. ஆனாலும், தாய்ப்பூனைக்கு அவ்வளவு பெரிய சம்சாரமிருந்தால் காப்பாற்றுவது வருத்தமாகுமென்று தெரிந்து குடியானவன் இரண்டு பூனைக்குட்டிகளை வேறிடத்திற்கு எடுத்துக்கொண்டுபோய்த் தானே காப்பாற்றிவந்தான். தாய்ப்பூனை, பூனைக்குட்டிகள், அணில் குட்டிகள் எல்லாம் வெகுநாள்வரையில் சுகமாகவே வாழ்ந்துகொண்டிருந்தன.

பன்றிக்குட்டியைப் பரிவுடன் வளர்த்த நாய்.

ஜீவகாருணியமுள்ள நல்ல நாய் ஒரு தருணத்தில் ஆறு குட்டிகள்போட்டு அவைகளைப் பரிவுடனே போஷித்துவந்தது. நாய்க்கு இந்த ஆறு குட்டிகளே பெரிய குடும்பமென்று அநேகர் நினைப்பார்கள். இந்த நாய் அவ்வளவோடு நிற்கவில்லை. ஆதாவில்லாத பன்றிக்குட்டி ஒன்று அவ்விடம் வந்து சேர்ந்தது. அதன் தாயான பன்றி மாமிசம் தின்பதில் மிகுந்த விருப்பமுள்ளதாகி, தன் குட்டியென்று பாராமல் அவைகளையும் ஒவ்வொன்றாய்ப் பிடித்துத் தின்ன ஆரம்பித்தது. தாய்க்கும் தன் வயிறே பெரிதாயிற்றல்லவா? அதைப்பார்த்து இந்தக் குட்டி மிகவும் பயந்து எப்படியாவது தன் பிராணனைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்று தன் தாயின் கையினின்றும் தப்பித்துக்கொண்டு வெளியேபோய்த் திரிந்து பார்த்தது. திரிகையில் ஒரு பள்ளத்திலே நாய்க்குட்டிகள் பரிவாய்ப் பாதுகாக்கப்பட்டு வருவதுகண்டு இது தானும் அங்கே போய்ச் சேர்ந்தது. நாய் இதை என்னவென்று நினைத்ததோ தெரியாது; ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தது. மறுநாள் காலையில் அக்கம் பக்கத்தார் வந்து பார்த்தபொழுது நாயின் படுக்கையில் குட்டிகள் ஆறு அல்ல; எழு இருந்தன. ஒன்று பன்றிக்குட்டி. எல்லாரும் அதை ஒரு ஆச்சரியமாய்ப் போய்ப் பார்த்தார்கள். இவ்வளவுமாத்திரமேயோ? அன்றுமுதல் பன்றிக்குட்டி தன் ஜாதிக்குரிய வழக்கங்களையும் நடத்தைகளையும் அனுசரிப்பதைவிட்டு நாய் ஜாதியின் நடத்தைகளையும் வழக்கங்களையுமே அனுசரிக்கப் பிரயத்தனப்பட்டது. பார்ப்பவர்களுக்கு அது இன்னும் அதிகமான வினோதத்தை உண்டாக்கியது. நாய் உட்காருவதுபோல் பின்பக்கத்தால் உட்காந்து பன்றிக்குட்டி முன்னங்கால் இரண்டினாலும் நாய்க்குட்டிகளைக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தது; நாயைப்போலக் குரைக்கவும் பிரயத்தனப்பட்டதாம். தன் குட்டிகளைப்போலப் பன்றிக்குட்டியையும் காப்பாற்றும்படியான பாக்கியம் தனக்குக் கிடைத்ததற்காக நாய் மிகுந்த மகிழ்ச்சிகொண்டிருந்ததாகத் தெரிகிறது.

வாயில்லா ஜீவன்களின் சவச்சாலை.

இறந்துபோன வாயில்லா ஜீவன்களின் உடலை அடக்கம் செய்வதற்காகப் பாரிஸ் நகரத்தில் ஒரு சிறிய தீவில் எழெட்டு வருஷங்களுக்குமுன் கட்டப்பட்ட சவச்சாலை ஒன்று இருக்கிறது. அதனுள் பிரவேசிக்கும் துவாரத்தில் கருங்கல்லால் விசித்திரமான கட்டடம் ஒன்று கட்டி, வளைவான வாயில் வைத்து, அதில் அழகான இருப்புக்கம்பிக் கதவு அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்

கும்பொழுதே அந்தக் கட்டடம் வெகு கம்பீர மாகத் தோன்றும். அந்தச் சாலையின் காவற்காரர் வசிப்பதற்கு இந்தத் துவாரத்தின் வலதுபுறத்திலே விநோதமான சிறு வீடு ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. நெடுநாள் தங்களுக்குத் துணையாயும் தோழர்களாயுமிருந்து தங்கள் வாழ்நாளில் மிகுந்த சந்தோஷத்தை யுண்டாக்கிவந்து கடைசியில் பரலோகம் சென்ற எளிய நாற்கால் ஜீவனை நேசர்கள்விஷயத்தில் தமக்குள்ள அன்பையும் நன்றியையும் இவ்விதமாக யாவருக்கும் நன்ருய் விளக்கிக் காட்டுவதற்கு, ஜீவஜந்துக்களிடத்தில் அபிமானமுள்ள ஸ்திரீகளும், புருஷர்களும் பின்வாங்குவார்களோ?

இந்தச் சவச்சாலைக்குள்ளே நுழைந்துபார்த்தால், நாற்புறமும் சிறிய பாதைகள் அமைக்கப்பட்டு அவற்றின் இருபுறமும் அழகான செடிகளும், மரங்களும் வளர்க்கப்பட்டு வெகு விசித்திரமாயிருக்கிறது. அங்கங்கே அடக்கம் செய்யப்பட்ட நாற்கால் ஜந்துக்களின் தலைப்புறத்தில் சிலையொன்று நாட்டி, அதில் அந்தந்த ஜந்துக்கள் செய்த அருமையான செய்கைகள் வரையப்பட்டிருக்கின்றன. அவை படித்துப் பார்ப்பவர்கள் ஒவ்வொருவர் மனத்தையும் உருக்கத்தக்கவையாயிருக்கும்.

ஒரு சேன்டு பர்ஞர்ட் நாயின் சமாதி.

அவற்றில் முதலிலே கட்டப்பட்டிருப்பது மிகவும் பிரசித்தமான சென்டு பர்ஞர்ட் நாய் ஒன்றினுடைய கோரியாம். எப்பொழுதும் பனியால் மூடப்பட்டிருக்கும் ஆல்ப்ஸ் மலையில் அந்த நாய் நாற்பது மனிதர்களுடைய பிராணனைப் பாதுகாத்த பெருமை என்றைக்கும் மறவாதிருக்கும்படி அதில் எழுதப்பட்டிருக்கிறது. உலகத்திற்கு ஒரு நன்மையும் செய்யாமல் இறந்துபோன உதவியற்ற மனிதர்களை அடக்கம் செய்த இடத்தில் ஆயிரமாயிரமாகச் செலவுபண்ணி, அவர்களுடைய ஞாபகக் குறியாகக் கோரிகள் கட்டியிருக்கிறார்களே! அப்படியிருக்க, பரோபகாரத்திற்காகவே தன் வாழ்நாள் முழுமையும் செலவழித்த இந்த நல்ல நாயின் பெயரும், பெருமையும் ஒருநாளும் மறவாதிருக்கும்படி இதை யடக்கம் செய்தவிடத்தில் அற்புதமான கோரிகட்டிச் சிலாசாஸனம் எழுதிவைப்பதைத் தகாதென்று எவரேனும் மறுக்கத் துணிவார்களோ? மனிதருடைய பிராணனைப் பாதுகாப்பதற்காகவே பிறந்த இந்த நல்ல நாய் கடைசியில் பிராணனை இழந்த பரிபவத்தைக் கேளுங்கள்: பனியில் அகப்பட்டுக்கொண்ட வழிப்போக்கன் ஒருவனுடைய உயிரை இது காப்பாற்றப் பாடுபட்டுக்கொண்டிருக்கையில், அந்தக் கிராதகன் தான் பயந்தவன்போலப் பாசாங்குபண்ணி, ஐயோ! இந்த நல்ல நாயைக் கொன்றுபோட்டான்.

மரணத்தினின்றும் இந்த நல்ல நாய் காப்பாற்றிய மனிதர்களில் சிறு குழந்தையொன்று உண்டு. அது ஒரு பெண்குழந்தை. அது ஆல்ப்ஸ் மலைப் பனியில் புதைந்துபோய்விட்டது. இந்த நாய் அக்குழந்தையைக் கண்டுபிடித்துத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டுபோய், அம்மலையிலுள்ள நல்ல சந்நியாசிகளிடம் சேர்த்தது. தன் வாழ்நாளில் இந்த நாய் செய்த இந்த உபகாரமொன்று மாத்திரமே இதை அடக்கம் செய்த இடத்தில் சிறந்த கோரியொன்று கட்டிச் சிலாசாஸனம் எழுதிப் பெருமைபடுத்தியிருப்பதற்குப் போதுமானதல்லவா? அந்தக் கோரியி லெழுதியிருக்கும் சிலா சாஸனத்தைப் படித்தால் எப்படிப்பட்ட மனிதனும் வெட்கப்படாமல் போகமாட்டான். அந்தச் சிலா சாஸனத்தின் கருத்தாவது,

> "இது நாற்பது மனிதர்களுடைய பிராணன்களைக் காப்பாற்றியது.
>
> இது காப்பாற்றப்போன நாற்பத்தோராவது மனிதனால் கடைசியில் கொல்லப்பட்டது."—என்பதாம்.

தன் நண்பர்களுக்காகத் தன் அருமையான உயிரைக் கொடுக்கத் துணிந்திருந்தது, ஐரோப்பா, அமெரிக்கா முதலான பல கண்டங்களிலும் பரவியுள்ள புகழ்பெற்ற இந்த நாய் ஒன்றுமாத்திரமேயல்ல; இதைப்போன்ற நல்ல நாய்கள் இப்படியே இன்னும் பல உண்டு. அவைகளின் உடலையும் இந்த இடுகாட்டில் அடக்கம்செய்து மேலே கோரியும் கட்டிச் சிலாசாஸனமும் எழுதப்பட்டிருக்கிறது.

வாயில்லா ஜீவன்களிடத்தில் மனிதருக்குள்ள கடமை.

அதைப்பார்த்துப் புத்தியில்லாத சிலர் இகழ்ந்து எள்ளனம் செய்வார்களோ என்னவோ? மிகுந்த தைரியமும் துணிவுமுள்ளவைகளான நமது நல்ல நண்பர்களுடைய ஞாபகத்திற்காகக் கட்டப்படும் இந்தக் கோரிகள் பழிக்கத்தக்கவையாகுமோ? இதற்காகப் பொருள் செலவு செய்தவரை நாம் மிகவும் மேலாகக் கொண்டாடி, அவர் முன் நடந்துகாட்டிய நல்ல வழியை நாமும் அனுசரிக்கவேண்டுமேயன்றி அவர்களை நாம் நகைக்கலாகுமோ?

"அந்தத் தோட்டத்தில் புகுந்தவுடனே என் மனத்தில் ஒருவிதமான பரிதாபமுண்டாகிவிட்டது. தம் ஆயுள் முழுவதும் நமக்கு நேசமாயும் துணையாயுமிருந்து காப்பாற்றிய, நமது சகோதரமென்னத்தகும், நாற்கால் ஜந்துக்கள் விஷயத்தில் சிலருக்கு உண்டான அன்பையும் அபிமானத்தையும் பார்த்துப் பரிகாசம் செய்பவர்களுடைய மனம் இங்கு எழுதப்பட்டுள்ள சிலாசாஸனங்களைப் பார்த்த பிறகுகூட உருகாதிருக்குமோ? அப்படியிருந்தால் அதென்ன கல்நெஞ்சோ என்று எனக்கு மிகுந்த ஆச்சரியமாயிற்று" என்று அங்கே போய்ப் பார்த்த ஒருவர் சொல்லுகிறார்.

நாய்களுக்குள்ள என்றைக்கும் மாறாத நன்றியறிவோடுகூடிய ஒப்பற்ற விசுவாசத்தினால் எத்தனைபேருடைய துக்கம் ஆற்றப்பட்டதோ, எத்தனைபேருடைய தனிவாழ்க்கை நல்வாழ்க்கையாகியதோ, எத்தனைபேருடைய பிள்ளைகளும் பொருளும் பண்டமும் பிராணனும் பாதுகாக்கப்பட்டனவோ, அது கடவுள் ஒருவருக்குத்தான் தெரியும்.

நல்ல நாய்கள், தம் யஜமானுடைய பாதத்தண்டை விழுந்து கிடக்கவேண்டிய உரிமை ஒன்று தவிர மற்றொரு பதில் உபகாரத்தையும் எதிர்பாராமல் அவனிடம் அளவில்லாத ஆசையை வைக்கின்றன; அதிக ஆசையுடன் தலையைத் தூக்கித் தன் யஜமானனைப் பார்த்தவண்ணமே அவன் எங்கே போனாலும் பின்தொடர்ந்து போகின்றன; அப்படித் தாம் ஆசையுடனே பார்க்கும் பொழுது, நாமும் அன்புடன் அதைப்பார்த்துக் கையினால் பிரீதியோடு தட்டிக்கொடுத்துப் பக்ஷமான பேச்சொன்று பேசினால் பேரானந்த மடைகின்றன; நமக்குத் தாழ்விலும் வாழ்விலும் தாமும் துணையிருந்து வேண்டிய உதவிசெய்யக் காத்திருக்கின்றன.

இவ்வுலகில் மனிதர்களெல்லாரும் முற்றும் சுயநயத்தையே பாராட்டுகிறவர்களாய்ப் பரோபகார சிந்தையென்பதைச் சிறிதும் நினையாதவர்களாயும், ஒருவருக்கொருவர் நிலையான நேசமென்பதைக் கொஞ்சமும் நாடாதவர்களாயுமிருப்பதனால், அவர்களைவிட்டு தம்மிடத்தில் கபடமில்லாத நேசமும் நன்றியுமுள்ள நாய்களையே நல்ல துணையாகப் பலர் கொண்டிருப்பது ஒரு புதுமையாகுமோ? எக்காலத்திலும் தமக்குத் துணையாயிருந்து தம்மைக் காப்பாற்றிய கூட்டாளிகளான ஜீவன்கள் மரணமடைந்தபின், அவைகளிடத்தில் தமக்குள்ள நன்றியை வெளியிட்டு அவைகளுடைய ஞாபகம் என்றைக்கும் மறவாதிருக்கச்செய்ய முயல்கிறார்களென்றால், அதுவும் ஒரு ஆச்சரியமாகுமோ?

இந்தச் சவச்சாலை நாய்களின் உடலை அடக்கம் செய்வதற்கு மாத்திரமேயல்ல; உபகாரிகளான பூனைகளை அடக்கம் செய்யவும் அதில் ஒருபுறத்தில் இடமேற்பட்டுப் பல பூனைகள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்தத் தீவின் ஒரு முனையில் சில சிறந்த குதிரைகளும் ஒரு சிங்கமும் அடக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு புதுமையான பக்ஷியை அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கட்டியிருக்கும் கோரியைப் பார்த்தால் எவரும் ஆச்சரியப்படுவார்கள். ஒரு கொடியவன் அந்தப் பக்ஷியைப் பாடச்செய்ய வேண்டுமென்று அதன் கண்களைக் குத்திவிட்டான். இரண்டு சிறுவர்கள் அதை அன்புடனே காப்பாற்றி அது இறந்தபின் அதை அடக்கம்பண்ணினவிடத்தில் அருமையான கோரியும் ஒன்று கட்டிவைத்துச் சிலாசாஸனமும் எழுதிவைத்திருக்கிறார்கள்.

அதிசயமான மூன்று தோழர்கள்.

அமெரிக்காவில் ஒரு சிங்காரத்தோட்டத்திலே கட்டியிருந்த தண்ணீர்த்தொட்டியில் புறாக்குஞ்சு ஒன்று விழுந்துபோயிற்று. சிறகுகளெல்லாம் நனைந்துபோகவே அதினின்று மேலே கிளம்பிப் பறந்துபோகச் சக்தியில்லாமல் அது அப்படியே மூழ்கிப்போவதுபோலிருந்தது. பக்கத்தில் அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பிரபு உடனே அவ்விடத்திற்குப் போய் அந்தப் புறாவைக் கையில் எடுத்து வீட்டுக்குக் கொண்டுபோய் வேண்டிய உபசாரம் செய்து அதற்கு உடம்பு சுகப்படும்படி செய்தார். புறாவுக்குப் பறந்துபோகச் சக்தி வந்த உடனே தன் வீட்டுக்கதவைத் திறந்து, அதன் இஷ்டப்படி வெளியே பறந்துபோய்விடப் புறாவுக்குக் குறிகாட்டினார். அதுவோ, அவரைவிட்டுப் போகப் பிரியப்படவில்லை.

அந்தப் பிரபுவினிடத்தில் பெண்நாய் ஒன்று இருந்தது. அந்த நாய்க்குச் சங்கீதமென்று புதுமையான பெயரொன்று வைத்திருந்தார்கள். அந்த நாயும் புறாவும் ஒன்றுக்கொன்று அன்பு பாராட்டிச் சீக்கிரமே உண்மையான கூட்டாளிகளாகிவிட்டன. இராத்திரி படுத்துக்கொள்ளும்பொழுது புறா, நாயின் கால்களுக்கு இடையே படுத்துத் தூங்கும். அந்தப் பிரபு பிரதிதினம் வெளியே உலாவப் போகும்பொழுது சங்கீதமும் அவரோடு கூடவே போகும். அதைப்பார்த்துப் புறா தனியேயிருக்கப் பிரியப்படாமல், அவர்களோடு கூடவே போகத் தொடங்கிற்று. அப்படிப் போகும்பொழுது சிலநேரம் அது அவ்விருவருக்கும் மத்தியில் மெல்ல நடந்துபோகும்; நடக்கமுடியாமல் களைத்துப்போனால், உடனே பறந்து நாயின் முதுகிலேறிச் சவாரிசெய்துகொண்டு போம். இது ஒரு விசித்திரமான காட்சியாயிருந்ததனால், அந்தப் பிரபு வெளியே புறப்பட்டுப் போகும்பொழுதெல்லாம் இந்த விநோதத்தைப் பார்க்கப் பலபேர் வந்து வீதியில் கூட்டம் கூடுவார்கள். ஐயோ! இப்பொழுது அந்த நாய் கிழமாகிவிட்டது. அதனால், மரணமாகிய கொடிய கள்ளன் வந்து அருமையான இம்மூன்று நேசர்களில் ஒன்றினுடைய உயிரைக் கொள்ளைகொண்டுபோய் விடுவானோவென்று அநேகர் பயந்துகொண்டிருக்கிறார்கள்.

உண்மையான நேசர்கள்.

மேனாட்டில் ஒருவன் கிழமாய்ப்போன குதிரைகளை விலைக்கு வாங்கி அவைகளைக் கொன்று மாமிசம் முதலானவைகளை விற்று ஜீவிப்பதே தனக்கு முக்கியமான தொழிலாகக் கொண்டிருந்தான். இப்படிச் செய்வதில் ஜீவகாருணியமான நல்லெண்ணம் அவனிடத்தில் சிறிதளவுகூட இருப்

பதாகத் தோற்றவில்லையே. ஆனாலும், ஒரு அதிசயமான செய்தி நடந்ததைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

ஒரு தருணத்தில் அவன் வியாபாரத்திற்காகப் பல குதிரைகள் வாங்கினான். உழைப்பினாலும், பசியாலும் மெலிந்துபோன அந்தக் குதிரைகளில் ஒரு குதிரையின் உடம்பில் அதன் இயற்கையான அழகுக்கு வேண்டிய குறிகள் நன்றாக விளங்கின. நியூபவுண்டுலாந்து நாய் ஒன்று அந்தக் குதிரையின் காலண்டையிலேயே சுற்றிக்கொண்டிருந்தது. அவன் அந்தக் குதிரைகளை ஓட்டிக்கொண்டு போகும்பொழுது அந்த நாயும் அதனோடுகூடவே விடாமல் பின்தொடர்ந்து போயிற்று; அவன் எவ்வளவு அதட்டி ஓட்டினாலும் அது அப்புறம் போகவில்லை. கடைசியில் அவன் கசையால் சுறீல் என்று ஒரு அடி அடித்தான். அடிக்கவே நாய் அந்த உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் மனம் நொந்து குதிரையின் பக்கத்தைவிட்டுச் சிறிதுதூரத்தில் அதன் பின்னேயே போய்க்கொண்டிருந்தது. புறப்பட்ட தினம் இராத்திரி அந்த வியாபாரி ஒரு சத்திரத்தில் இறங்கினான்; குதிரைகள் கொட்டிலிலே கட்டப்பட்டன.

மறுநாள் காலையில் அந்த வியாபாரி எழுந்து போய்ப் பார்த்தான். பார்க்கும்பொழுது அந்தச் சிறந்த நாய், குதிரைச்சாலையின் வாயிலண்டை படுத்துக்கொண்டு கிடந்தது. அது மிகுந்த பசியோடு இருந்தாலும், தன் பிராணன்போல நேசித்திருந்த பேதைக்குதிரையை விட்டுப் பிரியப் பிரியமில்லாமல் அதனோடுகூடவே போகப் பிரியப்பட்டிருப்பதாகக் காணப்பட்டது. அந்த நாய்க்குக் குதிரையினிடத்தில் இருந்த நேசத்தைப் பார்க்கவே, கடைசியில் அந்தக் கொடிய வியாபாரிக்கும் ‘ஐயோ பாவம்’ என்று அதனிடத்தில் இரக்கம் தோன்றிற்று. அதனால் அவன் அது கூடவந்தாலும் வரட்டுமென்று, அதை யொன்றும் செய்யாமல் சும்மா இருந்துவிட்டான். அவன் குதிரைகளை ஓட்டிக்கொண்டு அன்று இராத்திரி ஊர் போய்ச் சேர்ந்தான். மறுநாள் காலையில் குதிரைகளைக் கொல்லவேண்டுமென்று ஏற்பாடாகிவிட்டது. அதற்காக அவன் அந்தக் குதிரைகளையெல்லாம் ஒரு கூடத்தில் விட்டுப் பூட்டிவிட்டான்.

தன் தோழனைவிட்டுப் பிரிந்ததற்காக அந்த நாய் அப்பொழுது பட்ட சங்கடம் இவ்வளவவ்வளவல்ல; அதைப்பார்த்து அந்த எஜமானன் மிகவும் பரிதாபப்பட்டுத் தன் வேலைக்காரனை யழைத்து சொன்னதென்னவென்றால், ‟சேவகா! நீ இந்த நாயை அவிழ்த்து உன்னோடு அழைத்துக்கொண்டு போ; இது ஒரு குதிரையை உனக்குக் காட்டும்; அந்தக் குதிரையண்டையே நீ இந்த நாயை விட்டுவிடு. இதுவும் அந்தக் குதிரையும் மிகவும் அதிகமான அன்புள்ளவையாயிருப்பதால், அந்தக் குதிரையைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை; அதனால் எனக்கு அதிகமான நஷ்டமுண்டானாலும் உண்டாகட்டும்; அது எனக்குப் பெரிதல்ல” என்றான்.

அப்படியே அந்தச் சேவகன் போய் நாயை அவிழ்த்து விட்டான். தக்ஷணமே அது அதிக ஆசையோடு ஓடித் தன் எளிய நேசன் இருக்குமிடம் சேர்ந்து இராவெல்லாம் அதனோடுகூடவேயிருந்தது; இந்தக் குதிரையின் உயிரும் காப்பாற்றப்பட்டது.

சிலநாளைக்குப் பிறகு இந்தக் குதிரையை வியாபாரிக்கு விற்றவன் தன் அருமைநாயைக் காணாமல் விசாரித்தபொழுது இந்தச் செய்தி கேள்விப்பட்டு இவ்விடத்திற்கு வந்து பார்த்தான். தன் நாய்க்குக் குதிரையினிடத்தில் இருக்கும் அதிகமான விசுவாசத்தைக் கண்டு உள்ளம் கனிந்து தன் நாயைத் தான் பெற்றுக்கொள்ள விரும்பியபொழுது தன்னிடத்தில் நெடுநாள் உண்மை தவறாமல் உழைத்த கிழக் குதிரையையும் விலைகொடுத்து வாங்கிக்கொண்டான்; தன்னுடைய நல்ல நாய் நடத்திக் காட்டிய செய்கையைப் பார்த்துத் தான் செய்ய வேண்டிய கடமை இன்னதென்பதையும் தெரிந்துகொண்டான். அந்த நாய் தன் தோழனுடைய உயிரைக் காப்பாற்றியதோடுகூட, தள்ளாதவயதில் சுகமாக வாழவும் தங்கள் பழைய எஜமானனிடத்தில் நல்ல இருப்பிடமும் தேடிக்கொடுத்தது. தான் செய்யவேண்டிய கடமை இன்னதென்பதைத் தன்னிடமுள்ள இரண்டு வாயில்லா ஜீவன்களிடத்தில் கற்றுக்கொண்டதற்காக அவன் சிறிதும் அவமானப்படாமல் பெருமையாகவே நடந்து வந்தான்.

பாரிஸ் நகரத்து வண்டிக் குதிரைகள்.

பாரிஸ் நகரத்திலே குதிரைகளுக்கு நடக்கும் கொடுமை மிகவும் அதிகமென்றும், முக்கியமாய் வண்டிக்குதிரைகள் விசேஷமாக வருத்தப்படுகின்றனவென்றும், அந்த நகரத்திற்கு யாத்திரைபோய் வந்தவர்கள் புலம்பிக் கூவுகிறார்கள். அப்படிப் போய்ப் பார்த்துவந்த ஜீவகாருணியமுள்ள பிரயாணிகள் எழுதிய பல கடிதங்கள் பத்திரிகைகளிலே பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. அந்நகரத்திலே வயிற்றுக்குத் தீனியில்லாமலும், அளவுக்கு மிஞ்சி உழைத்தும், பின்னும் பலவகையில் கொடுமையாக நடத்தப்பட்டும் குதிரைகள் படும் கஷ்டங்களைக் கண்ணால் பார்க்கக் கூடவில்லையென்றும், பாரிஸ் பட்டணத்தின் பேரழகை இந்தக் கொடுமையாகிய மேகம் வந்து மூடிக்கொண்டிருக்கிறதென்றும் பல பிரயாணிகள் சொல்லித் துக்கப்படுகிறார்கள்.

ஒரு பிரயாணி எழுதிய கடிதம்.

நான் பாரிஸ் நகரத்தைப் பார்த்துக்கொண்டு போகையில் அங்கோரிடத்திலே நான் கண்ட பரிதாபக் காட்சியாவது:—ஒரு நாடகசாலையின் முன்புறத்தில் நிலக்கீல் பூசிய மழமழப்பான தரையில் நடந்துபோகமாட்டாமல் ஒரு வண்டிக்குதிரை கால் சறுக்கி விழுந்துவிட்டது. குதிரை கீழேவிழுந்தவுடனே முதல் முதல் வண்டிக்காரன் செய்த காரியமாவது, சிறிதும் கருணையில்லாமல் குதிரையை அவன் அடிக்க ஆரம்பித்தான். சாட்டையால் ஒரு அடி அடித்தால், கையினால் தன் வலியெல்லாம்கொண்டு அதன் வயிற்றில் நாற்பது ஐம்பது அடி அடிப்பான். ஐயோ பாவம்! அந்தக் குதிரை என்னசெய்யும்? எழுந்திருக்கப் பிரயத்தனப்பட்டது; அதனால் எழுந்திருக்க முடியவில்லை. மெல்ல வருத்தப்பட்டு முன்கால் இரண்டையும் தூக்கி வைத்தது; மறுபடியும் வழுக்கி நன்றாய் அடிபடும்படி விழுந்தது. இப்படியே பலதரம் விழுந்ததில் மண்டையிலே நல்ல அடிபட்டு மூக்கிலும், காதிலும், வாயிலும் உதிரமொழுகத் தலைப்பட்டது. கடைசியில் அந்த எளியஜீவன் வெகு பிரயாசைப்பட்டு மெல்ல எழுந்து நின்றது. உடனே அந்த வண்டிக்காரன் செய்ததை நினைத்தால் எனக்கு இப்பொழுதும் உடல் நடுங்குகிறது; குதிரை கஷ்டப்பட்டு எழுந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு நிற்கையில், அவன் சாட்டையால் ஓங்கி ஓடி யடித்தான். அந்த அடி தாளாமல் முன்போலவே குதிரை கீழே விழுந்துவிட்டது. மறுபடியும் அவன் அடிக்க ஆரம்பித்தான். வழியே போகிறவர்களில் ஒருவராகிலும் அவனை ஏனென்று கேட்கவில்லை. இப்படியே கால்மணிநேரம் வண்டிக்காரன் குதிரையைக் கொடுமையாய் அடிப்பதும் குதிரை எழுந்திருக்க முயன்று மறுபடியும் கீழே விழுவதுமாய் நடந்த பரிபவத்தைப் பார்த்து நான் பரிதாபப்பட்டு அவ்விடத்திற்கு ஓடி, பக்கத்திலே கிடந்த மணலை வாரிக்கொண்டுபோய் அந்தக் குதிரையின் காலண்டை தூவினேன். பிறகு பரிதாபமாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த குதிரையை அடிக்கவொட்டாமல் வண்டிக்காரனைத் தடுத்து, அந்த எளிய வாயில்லா ஜீவனைத் தட்டிக் கொடுத்தேன். அதனால் அதற்குக் கொஞ்சம் உற்சாகமுண்டாயிற்று. அப்புறம், அங்கே பெருங் கூட்டமாகக் கூடின பிரஜைகளெல்லாம் வியந்து பார்த்துக்கொண்டிருக்க, ஓரடிகூட அடிக்காமலே நான் அந்தக் குதிரையைச் சுகமாய் எழுப்பிவிட்டேன். பிறகு அது சந்தோஷமாகவே வண்டியை இழுத்துக்கொண்டு போயிற்று.

அங்கே நான் கண்ட கொடுமை இது ஒன்று மாத்திரமேயல்ல. ஒருநாள் நான் வண்டியில் ஏறிக்கொண்டு போகையில், அந்த வண்டியில் கட்டிய மெலிந்த குதிரையை வண்டிக்காரன் கொடுமையாய் அடிப்பதைப் பார்க்கப் பொறுமல் வண்டியை நிறுத்தச்சொல்லி நான் கீழே இறங்கிவிட்டேன். லண்டன் முதலான இங்கிலாந்து தேசத்துப் பட்டணமானால், நான் உடனே அந்த வண்டிக்காரனைப் பிடித்துப் போலீஸ் அதிகாரியினிடம் அப்பொழுதே ஒப்புவித்திருப்பேன்—என்று சொல்லுகிறார்.

மற்றொருவர் எழுதிய கடிதம்.

பாரிஸ் நகரத்திலே நல்ல வண்டிக்குதிரைகள் அகப்படாத வருத்தத்தினாலும், அங்கே குதிரைக்கு நடக்கும் கொடுமைகளை அடக்க ஒருவரும் முயலாமல் உபேக்ஷையாயிருப்பதைப் பார்க்க மனம் தாளாமையாலும், என்னுடைய சகோதரி பாரிஸ் நகரத்தை விட்டு வெளியே வந்துவிட்டாள். ஜீவகாருணியமுள்ள புருஷர்களும், ஸ்திரீகளும் பலர் பாரிஸ் நகரத்தில் குதிரைகள் படும் சங்கடங்களைக் கண்ணால் காணக்கூடாத துக்கத்தினாலேயே அந்நகரத்தில் நெடுநாள் நிற்பதில்லை; அநேகர் அவ்விடம் போகாமலே நின்றுவிடுகிறார்கள். ஆனாலும், சில வருஷங்களுக்கு முன்னிருந்ததைப் போல் அவ்வளவு அநியாயமில்லை. இப்பொழுது இந்நகரத்திலும், இத்தாலியா நகரத்திலும் சீர்திருத்தமும், ஜீவகாருணியமும் அதிகரித்து வருகின்றன வென்பது அநேகருடைய அபிப்பிராயம். உணவுக்கில்லாமல் இளைத்த குதிரைகளும், கிழக்குதிரைகளும், நொண்டிக்குதிரைகளும் கட்டிய வண்டிகளில் ஒருவரும் ஏறுவதில்லை. அதனால் வண்டிக்காரர்கள் குதிரைகளை வெகு ஜாக்கிரதையாய் வண்டிகளில் கட்டுகிறார்கள். இளைத்து மெலிந்த உபயோகமற்ற குதிரைகளை இராக்காலங்களிலேயே உபயோகிக்கிறார்கள்.

தள்ளாத குதிரைகளை வண்டியில் கட்டி யோட்டுவதைப் பார்ப்பவர்கள் உடனே அந்த வண்டியை நிறுத்தி வண்டிக்காரனுக்குத் தகுந்தபடி புத்திசொல்லி அவன் மனத்தில் இரக்கமுண்டாகச் செய்யவேண்டும். அவனுடன் இனிமையாகப் பேசவேண்டுமேயன்றிக் கோபித்துக் கடுமையாகப் பேசலாகாது; நல்லதனத்தினால் ஆகிற காரியம் பொல்லாமையால் ஒருபொழுதும் முடியாது—என்று ஒருவர் எழுதுகிறார்.

வேட்டையாடுவதைப்பற்றிச் சிறுவர் நினைப்பதென்ன?

சிறு பிள்ளைகள் அநேகமாய் வாயில்லா ஜந்துக்களிடத்தில் இயற்கையாகவே ஆசையும், அன்பும் உள்ளவர்களாயிருக்கக் காண்கிறோம். அவர்கள் வேட்டையாடும் வழக்கத்தைப் பெரியவர்களைப் பார்த்தே பிறகு அப்பியாசம் செய்துகொள்

ளுகிறார்கள். ஆனதுபற்றி நாம் சிறுபிள்ளைகளுக்கு ஜீவகாருண்யத்தை வெகு ஜாக்கிரதையாய்ப் போதிக்கவேண்டும். பக்ஷிகளாயினும், மற்ற வீட்டுப் பிராணிகளாயினும் என்றைக்காவது ஒருநாள் இறக்கவேண்டியவையேயானாலும், வீணாய் நாம் அவைகளை வருத்தி இம்ஸிப்பது பொல்லாத பாவமென்கிற உண்மை அவர்களுடைய மனதில் நன்றாய் ஊன்றும்படிச் செய்யவேண்டும். இயற்கையில் பிள்ளைகளுடைய மனது இரக்கமுள்ளதாயிருக்கிறது; பிறகு பழக்கத்தினாலேயே கொடுந்தன்மையுள்ளதாகிறது. எலி முதலான எளிய ஜந்துக்களைப் பிறர் கொல்லுவதைப் பார்த்தால், குழந்தைகள் பயந்து கூவி யழுவதை அநேகர் கண்டு இருக்கிறார்கள். ஆகையால் ஜீவகாருண்யத்தைப் பழக்குவதற்கு ஏற்றகாலம் இளமைப் பருவமேயாம்.

வேட்டையாடுவதில் சிறுவர்களுக்கு இயற்கையிலே வெறுப்பு அதிகமென்பதைக் குறிக்கும் சிறு கதையொன்று சொல்லுகிறேன் கேளுங்கள். மேனாட்டானொருவன் ஒரு சமயத்தில் தன் மாமன் வீட்டுக்கு வந்தான். அங்கு அவன் பொழுதுபோக்காக மாமன் பிள்ளைகளுக்குச் சில விநோதமான கதைகள் சொல்லத் தொடங்கினான். அப்படிச் சொல்லிவந்த பல கதைகளில், தான் ஒரு காட்டுக்குப் போயிருந்ததாகவும், அங்கே ஓடின ஒரு கரடியைத் தான் வேட்டையாடிக் கொன்றதாகவும், தன் சூரத்தனத்தை வெளியிட்டுச் சந்தோஷமாகச் சொன்னான். அதைச் சிறுவர்கள் வெகு கருத்தாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் போஜனம் செய்ய எழுந்து போனபொழுது அந்த விருந்தாளி மிகச் சிறுவனான ஐந்துவயதுள்ள ஒரு பையனைத் தன் பக்கத்தில் போஜனத்திற்கு உட்காரும்படி அழைத்தான். அதற்கு அந்தப் பையன் "நான் மாட்டேன்; அழகான சிறு கரடியை வீணாகக் கொன்ற பாவியின் பக்கத்தில் உட்கார்ந்து நான் போஜனம் செய்யமாட்டேன்" என்று தன் மன நற்குணம் வெளியாகும்படி வெள்ளையாகப் பேசினான். கரடியைக் கொன்றவன் தன்னைச் சூரனாக நினைத்திருக்கலாம்; நமது சிறுவனோ, தன் புத்தியில் அவனைப் பதராகவே நினைத்தான். இப்படிப்பட்ட இளம்பிள்ளைகளுடைய இளகிய மனம் கொடுமையாவதற்குக் காரணமென்ன? யோசித்துப் பாருங்கள்.

பூனைகளும் பக்ஷிகளும்.

அமெரிக்காவிலே தேசோபகார சபையின் அக்கிராசனாதிபதி ஒருவர் பக்ஷிகளைக் காப்பாற்றுகிற பெரிய காரியத்தில் உதவிசெய்யும்படி பலரையும் வருந்திக் கேட்கிறார். அந்த விஷயத்தில் கூடிய சீக்கிரம் விசேஷமான முயற்சி எடுத்துக்கொள்ளாதபக்ஷத்தில், கடற்கரைப் பக்ஷிகளும், மற்றும் பல உபயோகமான அழகிய பறவைகளும் பூண்டற்றுப் போய்விடுமென்று பரிதபித்துச் சொல்லுகிறார். அந்தப் பக்ஷிகள் வாழுமிடங்களை, முக்கியமாய் அவை முட்டையிடுகிறகாலத்தில், காத்துக்கொண்டிருப்பதற்கு முந்நூறு காவலாட்கள் வேண்டுமாம். அதற்காக, ஜீவகாருண்யமுள்ளவர்கள் உபகாரத் திரவியம் அனுப்பும்படியாகவும், அந்தச் சபையில் அத்தியக்ஷர்களாக வந்து சேரும்படியாகவும் அவர் வேண்டிக்கொள்கிறார்.

பூனையே பறவைகளைக் கொல்லுகின்றன என்பது கூடாது.

அவருடைய வேண்டுகோள் யாவரும் முக்கியமாகக் கவனிக்கத்தக்கதென்பதற்குத் தடையில்லை. ஆனாலும், அந்த விஷயத்தில் நாம் ஒரு சங்கதி எடுத்துச் சொல்லத் துணிகிறோம் இப்படிப் பக்ஷிகள் குறைந்துபோவதற்கு முக்கியமான காரணம் பூனைகளேயென்று பூனையின்மேல் பழிபோட்டு, அந்த அக்கிராசனாதிபதியும், மற்றும் சிலரும் எழுதியிருக்கிறார்கள். அது உண்மையென்றே நம்பிப் பூனைகளை அடியோடு ஒழித்துவிடும்படி, அந்த விஷயமாய் அநேகம் சஞ்சிகைகளும் கிளம்பியிருக்கின்றன. ஐயோ! வெள்ளைக்கார ஸ்திரீகள் தலைக்கோலம் செய்துகொள்வதற்காக, அளவற்ற பக்ஷிகள் கொல்லப்படுவதைப்பற்றி அந்த சஞ்சிகைகளில் ஒரு வரி கூடக் காணப்படவில்லையே! 20 பூனைகள் ஒரு வருஷத்தில் எத்தனை பக்ஷிகளைக் கொல்லுமோ, அதைப்பார்க்கிலும் அதிகமான பக்ஷிகளை ஒரே மனிதன் ஒரு நாளில் கையில் துப்பாக்கியைக் கொண்டு கொன்றுபோடுவான். காட்டிலும் கடற்கரையிலுமுள்ள பறவைகள் கொல்லப்படுவது பூனைகளாலோ? பூனையின்மேல் பழிபோடுகிறவர்கள், வெள்ளைக்கார ஸ்திரீகளின் தொப்பிகளைப் பார்த்தால், பக்ஷிகள் ஒழிவதற்குக் காரணம் இன்னதென்று சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாமே.

பட்டணத்துப் பூனைகளுக்குப் பறவை எப்படி கிடைக்கும்?

பூனைகளிடத்தில் தீராப்பகை யுடையவரென்று அக்கம் பக்கங்களில் பிரசித்திபெற்ற பண்டிதர் ஒருவர், வருஷந்தோறும் ஒவ்வொரு பூனையும் சராசரி 50 பக்ஷிகளைக் கொல்லுகிறதென்று தேச சரித்திரத்தினால் தெரியவருவதாகச் சிலநாளைக்குமுன் சொல்லியிருக்கிறார். மேல்பார்வையாய்ப் பார்க்கும்போதே, அவர் சொல்வது சரியல்லவென்று தெளிவாய் விளங்கும். பட்டணங்களில் பூனைகள் ஆயிரக்கணக்கா யிருக்கின்றனவே; அவைகளில் ஒவ்வொன்றுக்கும் வருஷந்தோறும் 50 பறவைகள் எங்கேகிடைக்கும்? பக்ஷிகளைப்பிடிப்பதில் பூனைகள் அவ்வளவு சாமர்த்தியமுள்ளவையானால், பட்டினியாய்ப் பட்டணத்திலே திரிகிற பூனைகள், வீடுகள்

தோறும் வந்து பழகி இரைபொறுக்கிக்கொண்டிருக்கிற சிட்டுக்குருவிகளையெல்லாம் பிடித்துத் தின்றுவிடலாமே? அப்படியே ஒவ்வொரு பூனையும் 50 குருவி வீதம் பிடித்துத்தின்பதானால், இப்பொழுது சிட்டுக்குருவிகளின் தொகை அநேகமாய்க் குறைந்துபோயிருக்க வேண்டுமல்லவா? அப்படிக் காணப்படவில்லையே!

பூனை பறவை பிடிப்பதை அதிகமாகப் பார்த்தவரில்லை.

பட்டணமிருக்கட்டும்; பட்டணத்துக்கு வெளியே, நாடுகளிலும், காடுகளிலும், வருஷவாரி ஒவ்வொரு பூனையும் 50 பக்ஷிகளைப் பிடித்துத் தின்பதாக அவர் எப்படிக் கணக்குக் கண்டுபிடித்தார்? தானே நேராகப் பார்த்துத் தெரிந்துகொண்டாரா? பூனைகளிடத்தில் பகைகொண்ட பிறர் சொல்லக்கேட்டு அறிந்துகொண்டாரா?

பக்ஷிகளிடத்திலும், பூனைகளிடத்திலும் அன்பும் ஆசையுமுள்ள ஸ்திரீகளும் புருஷர்களும் சொல்லுகிற பல உண்மையான விஷயங்களைக்கொண்டே, இந்தப் பண்டிதர் சொல்வது சரியல்லவென்று சுலபமாக நிரூபித்துவிடலாம். ஒரு திருஷ்டாந்தம் பார்ப்போம்: நமது வீட்டில் பல பூனைகள் இருக்கின்றன; நமது வீட்டை யடுத்த தோட்டத்திலுள்ள மரஞ்செடிகளில் பக்ஷிகளும் அநேகமிருக்கின்றன. அவை நமது வீட்டுப்புறத்திலுள்ள தண்ணீர்த்தொட்டிகளில் இறங்கிவந்து, தண்ணீர் குடிக்கவும் கண்டிருக்கிறோம்; பூனைகளும் அங்கே போய்த் தண்ணீர் குடிக்கப் பார்த்திருக்கிறோம். நமது வீட்டுப் பூனையாவது, அண்டைவீட்டுப் பூனையாவது, வெளிப் பூனையாவது, ஒரு பக்ஷியையாயினும் பிடிக்க நாம் பார்த்திருக்கிறோமா? ஒவ்வொரு பூனையும் வருஷவாரி 50 பக்ஷிவீதம் பிடித்துத் தின்னத் தலைப்பட்டால், பலவருஷங்களுக்கு முன்னமே நமது தோட்டத்தில் ஒரு பக்ஷிகூட இல்லாமல் ஒழிந்துபோயிருக்கவேண்டுமல்லவா?

இதனால், பூனைகள் பக்ஷிகளைப் பிடிப்பதேயில்லையென்று நாம் சொல்லவில்லை. பக்ஷிகளைப் பிடித்துத் தின்னும் பூனையும் சில உண்டு. பக்ஷிகளை வேட்டையாடுவதிலும், சுடுவதிலும், மீன் பிடிப்பதிலும், மனிதர்களுக்குள் எவ்வளவு வித்தியாச மிருக்கிறதோ, பக்ஷிகளைப் பிடிப்பதில் பூனைகளுக்குள்ளும் அவ்வளவு வித்தியாசம் உண்டு. நமது அக்கிராசனாதிபதியைப்போல, பக்ஷிகளிடத்தில் அதிகமான அபிமானமும், அதனோடு பூனைகளிடத்தில் பிரீதியுமுள்ள பெண்மணிகள் பலர், ஒவ்வொரு பூனையும் வருஷவாரி பிடிக்கும் பக்ஷிகளின் தொகை பத்துக்கு அதிகப்படாதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இன்னும் நுட்பமாக நாம் கணக்கிட்டுப் பார்ப்போமானால், இந்தத் தொகை இன்னும் குறைவுபடுமென்பதில் சந்தேகமில்லை. அப்படியானால்,

பக்ஷிகள் எங்கே போய்விடுகின்றன?

பக்ஷிகளின் தொகை குறைந்து போவதற்கு உத்தரவாதி யார்? என்றால், இவ்விஷயத்தைப்பற்றிப் பலதடவைகளில் பரிதாபமாய் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். இதைப்பற்றி ஒருவன் சொல்வதாவது,—“எங்கள் தோட்டத்தில் பிரதிதினம் நான் காலையில் போகும்பொழுது மரங்களில் அநேகம் பறவைகள் சந்தோஷமாகக் கூவும்; அதைக்கேட்டு நான் பேரானந்தப்பட்டுக்கொண்டு வருவேன். இப்படியிருக்க, நாளடைவிலே அந்தப் பக்ஷிகள் குறைவுபட ஆரம்பித்தன. கடைசியில் ஒருநாள் நான் போனபொழுது, ஒரு பக்ஷிகூடக் கண்ணுக்குப் புலப்படவில்லை. அன்று அவைகளின் பாட்டைக் கேளாமல்போனது, எனக்குப் பிராணன் போய்விட்டதுபோல் ஆயிற்று. இது பூனைகளால் வந்த கேடோ? அந்தத் தோட்டத்தில், பூனைகள் வர நான் ஒருநாளும் பார்த்ததேயில்லையே. அன்றையதினம் ஒருபெருமாட்டி மாமிசக்கடைக்குப் போய்த்திரும்பிவரும்போது, எதிரில் ஒருவன் தலையிலேகூடையெடுத்துக்கொண்டு வரக்கண்டாள். அவன் கிட்ட வந்தபொழுது பார்க்கையில், அந்தக் கூடையின் மேல் ‘தென்தேசத்துப் புதுமையான பக்ஷி’ என்று விலாச மெழுதியிருந்தது. அவள் கூடையை இறக்கச்சொல்லித் திறந்து பார்த்தாள்; அதில் அப்பொழுதுதான் அடிக்கப்பட்ட எங்கள் தோட்டத்து அருமையான பக்ஷிகளே நிறைந்து இருந்தன. ஐயோ! இதென்ன மோசம்! யாரோ சில மனிதர்களுக்கு இரண்டொருவாய் கவளத்துக்காகவன்றோ இவ்வெளிய ஜீவன்கள் இப்படி அநியாயமாய்க் கொல்லப்பட்டன! அவர்களுடைய பசியைத் தணிப்பதற்காக இவன் ஜீவஹிம்சை செய்ய உடன்பட்டதோடு, களவு செய்யவும் தலைப்பட்டானே! அவர்களுடைய பெரும்பசி மற்றும் பல பதார்த்தங்களால் தணியாதோ? இந்தப் பறவைகள் எவனோ ஒரு வேடனால் எதோ ஒரு பட்டணத்தில் ஒரு கடையிலே ஒருநாள் கொண்டு விற்கப்பட்டவையல்லவா? இப்படியே எத்தனையோ பட்டணங்களும், அங்கங்கே எத்தனையோ கடைகளும் ஏற்பட்டிருக்கின்றனவே; அங்கெல்லாம் விற்பனைக்கு வரும் அநேகமாயிரம் அழகான பக்ஷிகளைக் கொன்று தின்பவர் ஆணும் பெண்ணுமான மனிதர்களேயல்லவா? நமது பூனைகளல்லவே! இப்படியிருக்க, இந்தப் பெருங்கொலையைத் தடுக்க வழிதேடுவாரில்லாமல், நமது அருமையான பூனைகளை ஒழிக்கத் தலைப்பட்டிருக்கிறார்களே! எதோ ஒரு பூனை ஒரு பக்ஷியைப் பிடித்துத் தின்றதென்று பண்டிதர்களும், பத்திராதிபர்களும், பரிந்துபேசத் தலைப்பட்டார்கள்; ஆணும் பெண்ணுமான அநேகம் மனிதர்கள் பக்ஷிகளை ஆயிரக்கணக்காய்த் தின்பதை எடுத்துக் காட்டுவார் ஒருவருமில்லையே” என்று சொல்லுகிறான்.

வருஷவாரி அங்கங்கே விற்பனையாகும் பக்ஷிகளின் கணக்கைப் பார்த்தால் வருஷப் பிரதி வருஷம் லக்ஷோபலக்ஷம்

பக்ஷிகள் மனிதர்களால் வதைக்கப்படுகின்றன

வென்று தெளிவாகும். அதைப் பார்க்கும்பொழுது, ஒரு பூனை ஐம்பது பறவைகளைப் பிடித்துத் தின்பதாக வைத்துக்கொண்டாலும், அதுவும் ஒரு அழிவாக நினைக்கத்தகாதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குமல்லவா?

மேலும், பக்ஷிகளைக் கொல்பவர்களை நாம் ஒழிக்க வேண்டுமென்றால், முதலில் நாம் எங்கே துவக்க வேண்டும், அறிவீர்களோ? 'அண்டைவீட்டு வாலிபன் ஒருவன், கோடைநாளில் இரண்டொரு மாதத்தில் ஒரு சிறிய கைத்துப்பாக்கியைக்கொண்டு நூறு பக்ஷிகளைக் கொலைசெய்துவிட்டதாகப் பெருமை பேசிக்கொண்டான். இந்தச் சிறுவன் பெரிய பணக்காரன் வீட்டுப்பையன்; அவ்வீட்டார் மிகுந்த தெய்வபக்தி யுள்ளவரென்கிற பிரசித்தியுமுண்டு. இந்த வாலிபனைப் பார்த்து இன்னும் அநேகம் பிள்ளைகள் உற்சாகமடைந்தவர்களாகிக் காடுகளிற் புகுந்து கண்ட பக்ஷிகளைக் கொல்வதும், பறவைக் கூடுகளைக் கண்டு முட்டைகளை அபகரிப்பதுமாய்த் தீமைகள் செய்யத் தலைப்பட்டார்கள்' என்று பக்ஷிகளிடத்தில் அபிமானமுள்ள ஒரு நண்பர் சொல்லுகிறார். ஐரோப்பா அமெரிக்கா முதலான கண்டங்களில் பாடசாலை உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் பக்ஷிகளைப்பற்றின சங்கதிகள் நன்றாய்த் தெரியும்பொருட்டும், பக்ஷிகளிடத்தில் அவர்களுக்கு விருப்பமுண்டாகும்பொருட்டும், கூட்டங்கூட்டமாய்ப் பாடசாலைப் பிள்ளைகளைக் காடுகளுக்கு அனுப்பிவிடுகிறார்களென்றும், அதுவே கணக்கில்லாத அழகிய காட்டுப்பக்ஷிகள் ஒழிவதற்குக் காரணமென்றும் மற்றொரு நண்பர் சொல்லுகிறார்.

பூனையா மனிதர்களா பெருங்குற்றவாளிகள்?

பூனைகளுக்காக நாம் பரிந்து பேசாவிட்டாலும், அவைகளுக்குள்ள நியாயத்தைச் சற்று விசாரித்துப் பார்ப்போம். இறகு வியாபாரியின் வீடுகளையும், ஐரோப்பியப் பெருமாட்டிகளின் தொப்பிகளையும், மாமிசக்கடைகளையும் சற்றுப் பூராயமாய்ப் பார்த்து, பிறகு பறவைகள் மிகுதியாக மாள்வதற்கு முக்கிய காரண மின்னதென்று நிதானிப்போம். பூனைகள் சில பக்ஷிகளைப் பிடிக்கின்றனவென்றால், அவை தம் பசியைத் தணிப்பதற்காகவேயன்றோ பிடிக்கின்றன? மானிடர்களுடைய பெரும் பசியைத் தீர்ப்பதற்காக ஆடுமாடுகள் ஆயிரமாயிரமாய்க் கொல்லப்படுவதை நியாயமென்று சம்மதித்திருப்பதுபோல இதையும் சம்மதிக்கலாமே. பூனை பக்ஷியைப் பிடித்தாலும், அதனால் பக்ஷிக்குப் பிராணன் போய்விடுகிறதென்பது ஒன்றுதவிர மற்றொரு துன்பமுமில்லை. ஆடுமாடுகள் படும் வருத்தமோ சொல்லிமுடியாது. குளிரோ காற்றோ, வெயிலோ மழையோ, ஒன்றையும் பாராமல் தீனியும் தண்ணீருமில்லாமல், ஓரிடத்திற் கோரிடம் கொடிய காட்டுவழியே அவைகளை அடித்துக்கொண்டு போகிறார்கள். இந்தத் துன்பங்கள் பொறுக்கமுடியாமல் அநேகம் ஜீவன் நடுவழியே இறந்துபோகின்றன. இதற்கும் தப்பிப் பிழைத்தால், அவைகளை மந்தை மந்தையாய் இருப்புப்பாதை வண்டிகளில் போட்டு அடைத்துவிடுகிறார்கள். அங்கே ஒரு வாய் உணவாவது தவித்தவாய்க்குத் தண்ணீராவது உண்டோ? இந்த இம்சை ஒரு நாழிகையா, இரண்டு நாழிகையா? ஒரு நாளா, இரண்டு நாளா? இரவும் பகலும் ஓயாமல் இப்படியே பலநாள் துன்பத்தை அனுபவிக்கின்றன. ஐயோ! ஒரு பூனை தன் வயிற்றுப் பசிக்காக ஒரு பறவையைப் பிடிக்கிறதென்று பயந்து பரிதாபப்படுகிற ஆணும் பெண்ணுமான ஜீவகாருணியமுள்ள பல மகோபகாரிகளுடைய தீராப்பசியைத் தீர்ப்பதற்கேயல்லவா எத்தனையோ ஜீவராசிகள் இவ்வளவு இம்சைகளை அனுபவிக்கின்றன!

வாயில்லா ஜந்துவான பூனைக்கு என்னதெரியும் பாவம்! நாமும் அதைப்போல் ஒன்றும் தெரியாதவர்களா? பக்ஷி இறகுகளாலேயோ தொப்பிகளுக்கு அழகு செய்துகொள்ளவேண்டும்! அது நின்றால், அநேகம் அழகான பறவைகள் கொல்லப்படுவது ஒழிந்துபோகுமே! ரொட்டி பால் முதலான பலவகைப் போஜனங்களுடன் இறைச்சி கோழி மச்சம் முதலான மாமிசவகை தங்கள் பசியைத் தணிக்கப் போதாவோ? அழகான காட்டுப்பக்ஷியையும் கொன்று அதன் ஊனையும் ஒரு வாய் புசிக்கவேண்டுமோ?

பூனைகளைப்பற்றி நாம் சொல்லவேண்டுவது அதிகம் ஒன்றுமில்லை: பூனைகளுடைய நன்மைக்காகவும், அண்டை அயலாருடைய நன்மைக்காகவும், பக்ஷிகளுடைய நன்மைக்காகவும், பூனையின் பசி தணிய அதற்கு வேளைதப்பாமல் உணவு ஊட்டி அதைத் தம் வீட்டிற்குள்ளேயே வைத்துக் காப்பாற்றத் திறமையும் விருப்பமுமில்லாதவர்கள் ஒருவரும் பூனையை வைத்து வளர்க்க வேண்டுவதில்லையென்று வேண்டிக்கொண்டால், அதுவே போதுமானது. இரவெல்லாம் வெளியே அல்லாடிக் காலையில் பசி அதிகமாகி அதைத் தணிக்க ஒரு வழியும் கிடைக்காத ஒரு பூனை தற்செயலாய்த் தன் வாய்க்கு அகப்பட்ட ஒரு பூச்சியைப் பிடித்துத் தின்கிறதென்றால், இதை ஒரு பெரிய குற்றமாக வைத்துப் பழிக்கலாமா? மேலும் நினைத்தபோதெல்லாம் பூனைக்குப் பக்ஷி இரையாய் அகப்படுவது சுலபமான காரியமோ? ஆலோசித்துப் பாருங்கள்.

பூனைகளுக்கு அறிவு உண்டா?

பூனையை வைத்து வளர்ப்பவர்கள் பூனையின் புத்திசாலித்தனத்தை அவ்வளவாகப் பாராட்டுவதில்லை. பூனைகளுக்கு நாம் கற்பித்துக்கொடுத்தால், அது நாயைப்போலவே எதையும் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொள்ளும். பூனைக்கு நாம் வேண்டியதைக் கற்பித்துக்கொடுத்து வேளைதப்பாமல் தீனிபோட்டு வளர்த்துவந்தால், அது நமது சொற்படிக் கேட்டு நன்ருகவே நடக்கும்; ஒருவருக்கும் ஒருவிதமான உபத்திரவமும் செய்யாது. பூனை எப்பொழுதாவது பறவைகளைப் பிடிக்க ஆவல்கொண்டு பிரயத்தனப்படுவதை நாம் பார்ப்போமானுல், அந்தச் சமயத்தில் நாம் அந்தப் பூனையை வீட்டிற்குள் கொண்டுபோய் அதற்கு வேறே உணவு அளித்து அதன் பசியைத் தணித்துவிட்டால், பூனைக்கு அநேகமாய்ப் பறவை பிடிக்கிற வழக்கம் மாறிப்போய்விடும். இப்படியிருக்க, இந்தப் பேதைப் பிராணியைக் கொல்வதற்கோ பெருமுயற்சி கொள்ளவேண்டும்? ஒரு ஜீவஹிம்ஸையை விலக்கப்போய் மற்ரொரு ஜீவஹிம்சை செய்து நாமேன் வீண் பாவத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்?

சிறுபிள்ளைகளுக்கு ஜீவகாருணியப் பயிற்சியாலாகும் நன்மை.

அமெரிக்காவில் இப்பொழுது அநேகம் மாகாணங்களில் பாடசாலைகளிலே பிள்ளைகளுக்கு ஜீவகாருணியத்தைக் கற்பிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தமாய் ஏற்பட்டிருக்கிறது. அது பாடசாலையில் நடத்தப்படும் ஒழுங்கான பாடங்களில் ஒன்ருக ஏற்பட்டு இருந்தாலும் இல்லாவிட்டாலும், வாயில்லா ஜந்துக்களுக்கு உண்டாகும் அக்கிரமமான வருத்தங்களைப் பார்த்துப் பரிதாபப்பட்டு அதை விலக்க வேண்டுமென்கிற நல்லெண்ணமுள்ள உபாத்தியாயர்கள், பிள்ளைகளுக்கு மற்றப் பாடங்களுடனே ஜீவகாருணியத்தையும் கற்பித்து வருவது சுலபமான காரியந்தான். ஜீவகாருணியத்தை விளக்குவதான காரியங்களைத் தாங்கள் மேல்வரிச்சட்டமாக நடத்திக்காட்டியும், பிள்ளைகளுக்கு ஜீவகாருணியத்தைப் போதிக்கலாம். ஆதரிப்பா ரில்லாமல் தெருவிலே திரிந்துகொண்டிருந்த ஒரு நாயைக் கொண்டுவந்து தன் வீட்டிலே வைத்து ஒரு உபாத்தியாயர் பட்சமாகப் பாதுகாத்துவந்தார். அந்த நல்ல காரியத்தைக் கண்ணுலே பார்த்திருந்த பிள்ளைகள், தம் உபாத்தியாயரைப்போலவே, தாமும் வாயில்லா ஜீவன்களிடத்தில் பிரீதி பாராட்டத் தொடங்கினுர்கள். பிறகு அந்தப் பிள்ளைகளெல்லாம் ஜீவகாருணிய் சங்கமொன்று பாடசாலையில் ஏற்படுத்திக்கொண்டு, ஜீவகாருணிய விஷயமாய்ப் பல கடிதங்கள் அடிக்கடி எழுதிப் படிக்கத் தலைப்பட்டிருக்கிருர்கள்.

பிள்ளைகள் எழுதிய சில கடிதங்கள்.

1. "ஒருநாள் காலையில் நான் பள்ளிக்கூடத்திற்குப் போகும்பொழுது வழியிலே ஒரு நாய் வேலிக்குள் தலையை நுழைத்துக்கொண்டு, உள்ளே போகவும், வெளியே வரவும் சாத்தியப்படாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது. அதைப் பார்த்து நான் பரிதாபப்பட்டு அங்கே ஓடி அந்தவேலிக் கம்பியைச் சற்று நீக்கினேன்; உடனே நாய் சுகமாய்த் தன் தலையை வெளியே வாங்கிக்கொண்டு, சந்தோஷமாய் வாலையாட்டிக்கொண்டு போய்விட்டது" என்று ஒரு பையன் எழுதினுன்.

2. "என் வீட்டுக்கெதிரில் பெரிய குளமொன்றுண்டு; போனவாரம் அங்கே இரண்டு பிள்ளைகள் இரண்டு பூனைக்குட்டிகளைப் பிடித்துக்கொண்டு தண்ணீரில் போட்டு விளையாட வந்தார்கள். பூனைக்குட்டிகளைத் தண்ணீரில் போடவேண்டாமென்று நான் கூப்பிட்டுச் சொன்னேன். அதைக் கேளாமலே நான் கிட்டப் போவதற்குள்ளே ஒருவன் ஒரு குட்டியைத் தண்ணீரில் தூக்கிப் போட்டுவிட்டான். ஐயோ பாவம்! அந்தப் பூனைக்குட்டி வெகு வருத்தப்பட்டு, மெல்ல மெல்ல நீந்திக் கரைவந்து சேர்ந்தது. அப்பொழுது அதற்கிருந்த குளிரும் பசியும் சொல்லிமுடியா. நடந்து போகவும் அதற்குச் சக்தியில்லை. அது கண்டு நான் அதை வீட்டுக்குக் கொண்டுபோய் அதன்மேலுள்ள தண்ணீரையெல்லாம் துடைத்து உணவும் ஊட்டினேன். பிறகு எங்கள் வீட்டிலுள்ள ஒரு சிறு பெண் அந்தப் பூனைக்குட்டியைத் தான் காப்பாற்றுவதாக ஒப்புக்கொண்டாள்" என்பது மற்ரொரு பிள்ளை எழுதிய கடிதம்.

3. "ஒருநாள் சாயங்காலம் நான் வெளியே உலாவப் போனபொழுது மழைபெய்து சேருயிருந்த ஓரிடத்திலேபோன வண்டியின் சக்கரம் புதைந்துபோய் வண்டிமாடு அதை இழுக்கமாட்டாமல் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது. வண்டிக்காரன் அது தெரியாமல் மாட்டை யடித்து இம்சித்துக்கொண்டிருந்தான். அதைப்பார்த்து நான் தக்ஷணமே அவ்விடத்திற்குப் போய் வண்டிக்காரனுக்குப் புத்திசொல்லி மாட்டை யடிக்கவேண்டாமென்று தடுத்தேன். பிறகு, மாட்டை யவிழ்த்துவிட்டு, நானும் அவனுமாய் வண்டியை மெல்ல இழுத்துச் சேற்றுக்கப்புறம் கொண்டு சேர்த்துவிட்டோம்." என்று மற்ரொரு பையன் எழுதினுன்.

ஜீவகாருணியமான செய்கைகள் புகழத்தக்கவையா அல்லவா?

பிள்ளைகள் ஜீவகாருணியமான காரியங்கள் செய்தாலும், அது அவ்வளவாக மெச்சிக்கொள்ளத் தக்கதன்று. நல்லதோ கெட்டதோ, எல்லா குணங்களும் சுபாவத்திலேயே உண்டாகின்றவை; சுபாவமான குணங்களை நாம் என் புகழ்ந்துபேசவேண்டும் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஒரு பையன் விளையாட வெளியே ஓடிப்போகாமல் வீட்டிலிருந்து பெற்றோர் சொன்ன காரியங்களைச் செய்துவந்தாலும், ஆடு மாடு நாய் பூனை முதலியவைகளை ஆதரித்தாலும், இவையெல்லாம் அவன் செய்யவேண்டிய கடமைகளேயாம். அவைகளுக்காக நாம் அவனைப் புகழ்ந்துகொள்ளலாகாது. பிள்ளைகள் தாய் தகப்பன்மார் சொன்னபடி கேட்டு நடக்கப் பிரியப்படாவிட்டாலும், ஆடுமாடு முதலிய வீட்டு ஜந்துக்களை ஆதரியாவிட்டாலும், அவர்களைக் கண்டிக்கவேண்டியது நம்முடைய கடமையாம். பிள்ளைகளை எப்பொழுதும் கண்டிக்கவேண்டுமே தவிரப் புகழ்ந்து பேசக்கூடாதென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இது தப்பான கொள்கையல்லவா?

இவ்விதமாகவே நாம் நடந்துவருவோமானால், எல்லாக் காரியங்களும் சரியாக நடக்குமா? பிள்ளைகள் கொண்டாடினால் சரியாய் நடப்பார்களா, கண்டித்தால் சரியாய் நடப்பார்களா? இதை முதலில் நாம் யோசித்துப் பார்ப்போம். ஜீவகாருணியமான காரியங்களைச் செய்யும்படி பிள்ளைகளை நாம் உற்சாகப்படுத்தி, அவர்கள் அவ்விதமான காரியங்கள் செய்வதைப் பார்த்து நாம் அவர்களைப் புகழ்ந்து நமக்குள்ள சந்தோஷத்தை வெளிப்படுத்துவோமானால், அதைக்கேட்டு அவர்கள் உற்சாகமடைந்து, பின்னும் அப்படிப்பட்ட நற்காரியங்களை விசேஷமாகச் செய்யத் தலைப்படுவார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு நல்ல காரியங்களைச் செய்கையில் நாம் ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்துவிட்டால், அவர்கள் மேற்கொண்ட முயற்சியை அவ்வளவோடு நழுவவிடுவார்களென்பது நிச்சயம்.

மழையும் வெயிலுமில்லாவிட்டால் புல் பூண்டுகளும், பயிர் பச்சைகளும் பட்டுப்போமல்லவா? அப்படியே மேன்மேலும் புகழ்ந்து பேசி உற்சாகப்படுத்துகிறவர்களில்லாவிட்டால், ஸ்திரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் சிறு பிள்ளைகளாகட்டும், நல்ல காரியங்களைச் செய்வதில் சோம்பிச் சும்மா இருந்துவிடுவார்கள். ஆகையால், சுயநயம் பாராட்டுவதை விட்டுப் பரோபகாரத்தையே பெரிதாயெண்ணி மற்றப்பிராணிகளுடைய நன்மையைப் பாராட்டச் சிறிதளவு பிரயாசைப்பட்டாலும், அப்படிப்பட்டவர்களை உபேக்ஷையாக விடாமல் உடனுக்குடனே உற்சாகப்படுத்தி நல்வழிக்குக் கொண்டுவருவது நல்லோர்களுடைய முக்கியமான கடமையாம்.

சூரனான ஒரு சிறுவன்.

ஆபத்துக்காலத்தில் மிகுந்த தைரியமும், சமயத்துக்கேற்ற ஆலோசனையுமுள்ள சூரனான சிறுவன் செய்யவேண்டிய காரியம் இப்படிப்பட்டதென்பது அடியில் வரும் சிறு கதையினால் நன்றாக விளங்கும். பிரைட்டன் பட்டணத்தில் ஒருநாள் இராத்திரி குதிரைகள் கட்டியிருந்த பண்டசாலையின் மேல்மாடியில் திடீரென்று தீப்பற்றிக்கொண்டது. பல குதிரைகள் கீழே கட்டப்பட்டிருந்தன. நாற்புறமும் புகை சூழ்ந்துகொண்டு மேல்மாடியில் தீ ஓங்கி எரிய ஆரம்பித்தது. அதைப் பார்த்துப் பக்கத்திலிருந்த பத்து வயதுள்ள பையனொருவன், பெருந்தீக்குச் சிறிதும் பயப்படாமல், அநியாயமாய் உள்ளே உயிரிழப்பதற்கிருந்த குதிரைகளுக்காக மனமிரங்கி, திடீரென்று உள்ளே புகுந்து குதிரை கட்டியிருந்தகயிறுகளையவிழ்த்துவிட்டான். அதைப் பார்த்து வெளியேயிருந்த பலர் அந்தச் சாலையின் வாயிலை உடனே இடித்துத் தள்ளிவிட்டபடியால், பையனும், குதிரையும் தக்ஷணமே வெளியேவர அனுகூலமாகிவிட்டது. இந்தச் சூரன் செய்த ஸாகஸமான செய்கையைப்பார்த்து அநேகர் ஆச்சரியப்பட்டு, மூண்டு எரிகிற நெருப்புக்குச் சிறிதும் பயப்படாமல் தாமும் உள்ளே நுழைந்து, பத்துக் குதிரைகளை அவிழ்த்து அவற்றின் பிராணனைப் பாதுகாத்தார்கள். குதிரைகள் வெளியேவந்த இரண்டொரு நிமிஷத்திற்கெல்லாம் மேல்மாடி இடிந்து விழுந்து, அந்தக் கட்டடத்தின் ஒரு மூலையிலிருந்த இரண்டு ஆடுகள் இறந்துபோயின. இச்சிறுவன் துணிந்துபோய் அவிழ்க்காமல் இருந்தால் குதிரைகளுக்கும் அந்த கதிதானே நேரிட்டிருக்கும்?

நடுக்கடலிலே நடந்த துக்கச்செய்தி.

கப்பல் தலைவன் ஒருவன் சொல்வதாவது,—“நீராவிக்கலமொன்று நடுக்கடலிலே போய்க்கொண்டிருக்கையில், ஒருநாளுமில்லாத பயங்கரமான புயல்காற்று ஒன்று உண்டாயிற்று. அந்தக் கப்பலில் நாலுவயதான சிறு பெண்குழந்தையைத் தேக சவுக்கியத்திற்காக அதன் பெற்றோர்கள் எடுத்துக்கொண்டு வந்திருந்தார்கள். கப்பல் யாத்திரையில் கடல்நோய் கண்டு அந்தக் குழந்தை நடுவழியில் இறந்துபோய்விட்டது. இனிச் செய்யவேண்டுவதென்ன? அந்தப் பிரேதத்தை நடுக்கடலில் எறிந்துவிடத் தீர்மானித்தார்கள். அந்தக் குழந்தைக்குச்

சொந்தமாய் அதனோடு கூடவே எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருந்த நாய்கள் இரண்டு உண்டு. அவைகளும் அந்தக் குழந்தையுடனே கப்பலில் புறப்பட்டு வந்தன. அந்த இரண்டு நாய்களையும் கப்பலில் மேல்தளத்தில் கட்டிவைத்திருந்தார்கள். குழந்தை இறந்துபோனது அவைகளுக்குத் தெரியுமோ, தெரியாதோ? கடைசியில் இறந்துபோன பெண்குழந்தையி னுடலைக் கப்பலின் மேற்புறத்திலிருந்து கடலில் எறிந்தபொழுது அதைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு நாய் உடனே அறுத்துக் கொண்டு தன் யஜமானியோடு கூடவே கடலில் குதித்துவிட்டது. மற்றொரு நாயைக் கட்டிய கயிறு மிகவும் உறுதியாயிருந்ததுபோலும். அது தன்னுலானவரையில் பாடுபட்டுக் கயிற்றை அறுத்துக் கொள்ள முயன்றது; கயிறு அறுபடாமையால் அது மிகுந்த துக்கமடைந்து, பயித்தியம் பிடித்ததுபோல் ஒன்றும் தோன்றாமல் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தது. அந்தச் சங்கடத்தைப் பார்க்கப் பொறுமல் அந்த நாயை அவிழ்த்துக் கப்பலின் உள் அறைக்குக் கொண்டுபோய்விட்டார்கள்" என்கிறான்.

நாய்களுக்குத் தமது யஜமானனிடத்திலுள்ள அபிமான மிப்படிப்பட்டதென்பது அவைகளுடன் பழகியவர்களுக்குத் தெரியாதா? அப்படியிருக்க, அந்தக் குழந்தையி னுடலைக் கடலில் எறிந்த துக்கத்தை இந்த நாய்கள் பார்த்துக்கொண்டிருக்கும்படி அவைகளை ஏன் எதிரில் வைத்திருந்தார்களோ, அதுதான் பெரிய ஆச்சரியமாயிருக்கிறது; நமக்கு மிகுந்த துக்கத்தையும் உண்டாக்குகிறது.

எளிய ஜந்துக்களுக்கு ஆலோசிக்கும் திறமை உண்டா?

பூனை.

ஒரு வீட்டிலே குடியிருந்த பூனை தான் இருந்த அறையின் கதவு தாள்போட்டு மூடப்பட்டிருந்தது கண்டு, தான் மெல்ல மேலே எழும்பித் தன் காலால் கதவின் தாழ்ப்பாளைத் திறந்துவிட்டது. அது பழையமாதிரியான தாழ்ப்பாள். அதன் ஒரு பக்கத்தைக் கையினால் அழுத்தினால், தாள் சுழன்று கதவு திறந்துபோகும். இதை அந்தப் பூனைக்குக் கற்பித்தது யார்? வீட்டுக்காரர் திறக்கும்பொழுது பார்த்திருந்து பூனை அந்த நுட்பத்தைத் தெரிந்து கொண்டதோ, அல்லது தானே ஆலோசித்துத் தெரிந்துகொண்டதோ, தெரியாது. இதேவிதமாகவே மற்றொரு பூனை ஒரு அறையின் தாழ்ப்பாளைத் திறந்துவிட்டது. அது குறுக்கே தள்ளுகிற தாழ்ப்பாள். 'அந்த அறையில் என்னுடைய நண்பன் ஒருவன்மாத்திரம் தனியே படுத்திருந்தான். திடீரென்று தாழ்ப்பாள் ஓசைகேட்டுக் கதவு திறக்கப்படவே, அவன் இதென்னவென்று திடுக்கிட்டு எழுந்து பார்த்தான். அப்பொழுதும் பூனை கதவிலேயே தொத்திக்கொண்டிருந்தது' என்று ஒருவர் சொல்லுகிறார். இது தேக பலத்தினால் ஆகிற காரியமேதவிர, யுக்தியாலும் ஆலோசனையாலும் செய்கிற காரியம் அல்லவென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆலோசனை யில்லாவிட்டால், இப்படிச் செய்தால் கதவு திறந்துபோகுமென்பது பூனைக்கு ஒருபொழுதும் தெரியாதாகையால், எளிய வாயில்லா ஜந்துக்களுக்கும் ஆலோசனைத் திறமை உண்டென்றே அநேகர் ஆச்சரியப்பட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

நாய்.

நாய்களுக்கு ஆலோசிக்கும் திறமை உண்டென்பதை விளக்கும் திருஷ்டாந்தங்கள் அநேகமுண்டு. அப்படியிருந்தும், நன்றாய்த் தெரிந்த மனிதர்கூடச் சிலர் நாய்கள் எப்படிப்பட்ட அருமையான காரியங்களைச் செய்தாலும், எல்லாம் இயற்கை அறிவேதவிரச் செயற்கை அறிவு அவைகளுக்குக் கிடையாதென்று மறுக்கிறார்கள். எல்லாவற்றையும் கண்ணெதிரே பார்த்துக்கொண்டிருந்தும் இல்லையென்று மறுப்பவர்களைப்பார்க்கிலும் பெரிய குருடர் வேறு உண்டோ?

இருப்புப்பாதை நிலைக்குத் தலைவராயிருந்த ஒருவருடைய நாய் ஒருநாள் ஏதோ ஒரு வண்டியைத் தொடர்ந்து அதன் பின்னேயே இரண்டு மூன்று மைல்தூரம் போய்விட்டது. இந்தப் பிரயாணம் அன்றையதினம் காலையில் நடந்தது. அன்றையதினமே நடுப்பகலில் நல்ல வெயிலிலே திரும்பிக் காலால் நடந்து தன் யஜமானனிடம் வந்து சேர்ந்துவிட வேண்டுமென்கிற எண்ணத்துடனே அது புறப்பட்டுப்போயிருக்குமா? அதன் எண்ணம் கடவுளுக்குத்தானே தெரியும். வழியேபோகும் வண்டியைப் பின்தொடர்ந்துபோன நாய் மூன்றுமைல் தூரத்திற்கு அப்பால் இருப்புப்பாதை வண்டிநிற்கும் ஒரு இடத்திலே நின்றுவிட்டது. அங்கிருந்து இருப்புப்பாதை வண்டி புறப்படுவது அதற்கு எப்படித் தெரியுமோ? அந்த நிலையிலே போய் அது காத்திருந்து, பகலுக்குமேல் ஒரு வண்டித்தொடர் அங்கிருந்து புறப்படுகையில் நம்முடைய நாய் அதில் எப்படியோ ஏறிக்கொண்டது. தன் யஜமானனிருக்கிற நிலையில் வண்டித்தொடர் வந்து நின்றவுடனே நாய் கீழே குதித்து, தன் யஜமானனிருக்கும் அறையிலே போய், தான் ஒருவருடைய அனுமதியும் இல்லாமல் சுதந்தரமாய்ப் பிரயாணம் போய் வந்ததற்காக மிகவும் மகிழ்ச்சிகொண்டது போல வாலாட்டிக்கொண்டு நின்றது. இது இயற்கையறிவோ, செயற்கையறிவோ யோசித்துப்பாருங்கள்.

நேராகக் குறிபார்த்து அடிப்பவர் அருமை.

வேட்டையாடுவதில் மிகுந்த சாமர்த்தியமுள்ளவரென்று பெருமை யடித்துக்கொள்கிறவர்கள் பலருண்டு. ஆனலும் அவசியமாக வேண்டிய இடங்களில் இந்தச் சாமர்த்தியம் அவ்வளவாகப் பயன்படுவதில்லை. அநேகர் குறிதப்பாமல் அடிக்கும் நுட்பத்தை நன்ருய்த் தெரிந்துகொள்ளாமல் இலக்குத் தப்பி யடித்து வீணை வருத்தத்தை யுண்டாக்கியிருக்கிருர்கள். ஒரு போர்க்களத்திலே ஒரு குதிரை கீழே விழுந்து காலை ஒடித்துக்கொண்டது. உடனே அதைச் சுட்டுவிடும்படி உத்தரவு பிறந்தது. அதைச் சுடுவதற்காக வந்த போர்வீரன் ஏழுதரம் அதன்மேல் குண்டுவைத்து அடித்தான். அந்த ஏழுதடவையிலும் உயிர்போகாமல் அந்தப் பேதைக் குதிரை பரிதாபமாய்த் துடித்துக்கொண்டிருந்தது. இதைவிடப் பிராணிகளுக்கு ஹிம்ஸையான காரியம் வேறென்னவேண்டும்? இதற்குக் காரணம் அவன் தன் தொழிலை நன்ருய்த் தெரிந்துகொள்ளாத குற்றமே அல்லவா? முதல்தடவை சுட்டபோதே குறிதப்பாமல் அதன்மேல் பட்டுப் பிராணன் போயிருந்தால், ஒருவகைஉபத்திரவமும் இல்லாமல் அந்தப் பிராணி சுகப்பட்டுப் போயிருக்குமல்லவா? இப்படியே பைத்தியம் பிடித்தவையென்று பல நாய்களைச் சுடப்போய், குறி தப்பி அநேகர் அதிகமான உபத்திரவத்தை யுண்டாக்கியிருக்கிருர்கள். ஐயோ! நாய்கள் படும்பாடு ஒருபக்க மிருக்கட்டும்; குறிதப்பாமல் அடிக்கத் தெரியுமென்று பெயர் வைத்துக்கொண்டுபோய் வீணை பாவத்தைத் தேடிக்கொள்ளுகிருர்களே, அவர்களுடைய விதியை நாம் என்ன என்று வெறுத்துக்கொள்வது!

நாநாவிஷயங்கள்.

1. **பறவைகளெல்லாம் போய்விட்டால் என்ன?**—உலகத்திலுள்ள பக்ஷிகளெல்லாம் கொல்லப்படுமானல், அப்பொழுது இப்பூமியில் ஒரு மனிதனும் வாழ்ந்திருக்க முடியாது. ஏனென்ருல், பயிர் பச்சை, செடி கொடி எல்லாவற்றையும் முழுமையும் அழித்துவிடும்படி புழு பூச்சிகள் அவ்வளவு விசேஷமாக விருத்தியாகிவிடும். அவை போய்விட்டால் மனிதனுக்கு ஜீவனமேது?

யுனைடெட் ஸ்டேட்ஸிலே மாத்திரம் வருஷவாரி பயிர்த்தொழிலாளிகளுக்குப் பயிர்த்தொழிலுக்குமாத்திரம் பக்ஷிகளால் மிகுத்தப்படும் பொருள் பத்துகோடி டாலர் என்று ஸ்மித்து என்னும் ஒரு வித்வான் கண்டு மதிப்பிட்டுச் சொல்லியிருக்கிருர்.

2. **இறகுக்கு மாத்திரமே அழிக்கப்படும் பறவை.** — இறகு வியாபாரிகளால் கொல்லப்படும் பக்ஷிகளின் தொகையைக் கேட்டால் மிகவும் நடுக்கமுண்டாகிறது. ஐரோப்பியப் பெருமாட்டிகள் தம் தொப்பிகளில் அழகாக வைத்துக்கொள்ளுவதற்கு வேண்டிய இறகுகளுக்காகமாத்திரம் வருஷவாரி வதைக்கப்படும் பக்ஷிகளின் தொகை கோடிக்கு மேலாகிறதென்று கணக்கிட்டிருக்கிருர்கள். ‘ஐயோ! இத்தனை வாயில்லா ஜந்துக்களை வதைத்தோ, நாம் அலங்காரம் செய்துகொள்ளவேண்டும்’ என்று அப்பெருமாட்டிகள் சற்று ஆலோசிப்பார்களானல், இக்கொடுங் கொலை அநேகமாய் ஒழிந்துபோமென்பதில் சந்தேகமில்லை.

3. **பழகின பிராணிகளைத் தனியே விட்டுப் பிரிவது பெரும் பாவம்.**—நாயோ, பூனையோ, குதிரையோ, எந்தப் பிராணியாகட்டும், நம்மிடம் அன்புள்ளவைகளை நாம் இடம்விட்டு இடம் மாறும் காலங்களில் தனியேவிட்டுப் போகலாகாது. அப்படி விட்டால், தம் நண்பர்களை விட்டுப் பிரிந்த விசனத்தினல் அவைகள் ஏங்கி மனம் புண்பட்டு, இரையும் தொடாமல் உடல் மெலிந்து மிகவும் வருத்தப்படுகின்றன. எங்கே போனலும் அவைகளைக் கூடவே கூட்டிக்கொண்டு போவது உத்தமம். அப்படிச் செய்யச் சாத்தியப்படாவிட்டால், அவைகளைக் கொலைசெய்துவிட்டுப் போவது நலமென்று அநேகர் அபிப்பிராயப்படுகிருர்கள்.

4. **ஆடுமாடுகளின் இம்சை ஒருவாறு ஒழியும் உபாயம்.** — உணவுக்கு அடிப்பதற்காக ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்குக் கொண்டுபோகப்படும் ஆடு மாடுகளும், கன்றுக்குட்டிகளும் வாயினல் சொல்லமுடியாத சங்கடங்களை யனுபவிக்கின்றன வென்று சொல்லியிருக்கிருேமல்லவா? கன்றுக்குட்டிகள் படும் பரிதாபத்தைமாத்திரமாவது ஒவ்வொருவரும் சற்றுக் கவனிப்பார்களானல், பிறகு கன்றுக்குட்டி மாமிசம் விற்பனைக்கு மாமிசக்கடையில் வரவே வராதென்று நாம் உறுதியாய்ச் சொல்லலாம். இதுவிஷயத்தில் விசேஷமான சீர்திருத்தம் செய்யவேண்டியது மிகவும் அவசியம். பல வருஷங்களாய் இதைப்பற்றி ஒருவரும் கவலை யெடுத்துக்கொள்ளாம லிருப்பதனல் உண்டாகும் துன்பம் மிகவும் கொடியதாயிருக்கின்றது. மாடுகளை யடித்து மாமிச விற்பனை செய்து பொருள் தேடுகிற தொழிலில் இருக்கும் கொடிய மனிதர்கள் ஈவிரக்கமில்லாத கல்நெஞ்சராகித் தங்கள் தொழிலைத் தடையில்லாமலே செய்து வருகிருர்கள். இவ்வகைக் கொடுமைகளால் நாம் தின்னும் ஆடு மாடுகளின் ஊனும் உதிரமும் கெட்டுப்போகின்றனவென்றும், அதனல் அதைத் தின்பவர்களுக்குப் பலவிதமான நோய்கள் உண்டாகின்றனவென்றும், மனிதர்கள் தெரிந்துகொள்வார்களானல், அப்பொழுது தங்கள் தேக சௌக்கியத்திலுள்ள ஆசையினல் அவர்கள் ஜீவஹிம்சையாகிய கொடுமை செய்வதை விட்டு நல்ல வழிக்குத்

திரும்பி விடுவார்களென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம்,

5. ஜீவகாருணியப் பயிற்சிக்காக ஏற்பட்ட சட்டம். — மேயின், வாஷிங்டன், காலிபோர்னியா, கொலரேடோ, தென் டெகோடா, யோகஹாமா, இதாஹோ, மந்தானு, தெக்ஸாஸ், பென்ஸில்வானியா முதலான மாகாணங்களிலே பாடசாலைகளில் மற்றப் படிப்புடனே ஜீவகாருணிய விஷயங்களையும் படிப்பிக்கவேண்டியது அவசியமென்று சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் அந்நாடுகளில் அப்படியே நடத்திவருவதனால், விசேஷமான நன்மை விளைந்துகொண்டிருக்கிறதென்று பாடசாலை உபாத்தியாயர்களிடத்தியிருந்தும் பாடசாலை விசாரணைத் தலைவர்களிடத்தியிருந்தும் பல அத்தாக்ஷிகள் வந்துகொண்டிருக்கின்றன.

6. நாய்க்கு உள்ள நல்ல விசுவாசம்.—ஒரு வாலிபனை அவன் செய்த ஏதோ ஒரு குற்றத்திற்காக ஐந்துநாள் சிறையில் வைக்கும்படித் தீர்மானம் செய்யப்பட்டது. தீர்மானமாகி அவனைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோனபொழுது அவனுடைய நாய் சிறைச்சாலையின் வாசல்வரையில் அவனைப் பின்தொடர்ந்துபோய், அவன் திரும்பி வருதலை எதிர்பார்த்து அங்கே படுத்துக்கொண்டது. பகலெல்லாம் அந்த நாய் சிறைச்சாலைச் சுவரோரத்தில் இருப்புக் கம்பிகோத்த ஒரு சாளரத்தின் கீழே காவல் காத்துக்கொண்டிருந்ததாம். அங்கிருந்த காவற்காரர்கள் அதை அப்புறம் ஓட்டிவிடத் தங்களால் ஆனவரையில் பாடுபட்டுப் பார்த்தார்கள், சாத்தியப்படவில்லை. அந்த நாயும் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவர்கள் கொண்டுவந்து போட்ட உணவையும் அது தொட்டுப் பார்க்கவில்லை.

7. முப்பத்தாறு வயதான ஒரு குதிரை.—அமெரிக்காவிலே ஒரு பெண்குதிரை முப்பத்தாறு வயதாகியும் நல்ல தேக சௌக்கியத்துடன் சுகமாய் உழைத்துக்கொண்டிருக்கிறது. அது முப்பத்திரண்டு வருஷங்களுக்கு முன்னே 100 ஷில்லிங்குக்கு வாங்கினது. அது ஒரு சமயத்தில் இரண்டு நிமிஷத்திலே அதிக ஓட்டமில்லாமல் சாதாரண நடையாகவே நடந்து ஒருமைல் தூரம் சென்றதாம். நாளைக்கும் அது நல்ல புஷ்டியும் சுறுசுறுப்புமுள்ளதாயிருக்கிறது. அதைப் பார்க்கும்பொழுது, குதிரைகளை ஏற்றபடி ஆதரித்துப் போஷித்தால், அவை வெகுகாலம் தம் வலி குன்றாமலே சுகமாக உழைத்துக்கொண்டிருக்குமென்று யாவருக்கும் நன்றாய் விளங்குமல்லவா?

8. எது நியாயமானது.—உங்களைப் பிறர் எப்படி நடத்தவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அப்படியே மற்ற எல்லாப் பிராணிகளையும் நீங்கள் நடத்தினால்தான் நியாயத்தைச் செய்தவர்களாவீர்கள். நீங்கள் ஆடு மாடுகளையாவது குதிரைகளையாவது வைத்திருந்தாலும், அவைகளை நீங்கள் வண்டியில் கட்டி யோட்டினாலும், அப்பொழுது, நீங்கள் அந்தப் பிராணிகளாயிருந்தால் உங்களைப் பிறர் எப்படி நடத்தவேண்டுமென்று விரும்புவீர்களோ, அதை யோசித்து அதற்குத் தக்கபடி நடவுங்கள். நீங்கள் செய்யும் உதவிக்குப் பிரதி உபகாரம் செய்ய அவைகளால் கூடாதகாரியமானாலும், அவைகள்விஷயத்தில் நீங்கள் நியாயத்தைச் செலுத்தி நீங்கள் பட்ட கடனைத் தீர்த்துக் கொள்ளலாம்.

இயற்கை விளக்கக் கவிகள்.

விவேக சிந்தாமணி.

நல்லோர் புல்லோர் இயல்பு.

தண்டா மரையின் உடன்பிறந்து தண்டே னுகரா மண்டூகம்
வண்டே கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகி இருந்தாலும் அறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மில் கலப்பார் கற்றோரே.

தாமரையின் இயல்பு.

சங்குவெண் டாமரைக்குத் தந்தைதாய் இரவிதண்ணீர்
அங்கதைக் கொய்துவிட்டால் அழுகச்செய் தந்நீர்கொல்லும்
துங்கவெண் கரையில்போட்டால் சூரியன் காய்ந்துகொல்வான்
தங்களின் நிலைமைகெட்டால் இப்படித் தயங்குவாரே.

முதலையின் இயல்பு.

யானையைச் சலந்தனில் இழுத்த அக்கரா*
பூனையைக் கரைதனில் பிடிக்கப் போகுமோ
தானையும் தலைவரும் தலம்விட் டேகினல்
சேனையும் செல்வமும் தியங்கு வார்களே.

* கரா = முதலை.

நாயின் சுபாவம்.

குக்கனைப்* பிடித்துநாபிக் கூண்டினில் அடைத்துவைத்து
மிக்கதோர் மஞ்சள்பூசி மிகுமணம் செய்தாலுந்தான்
அக்குலம் வேறதாமோ அதின்மணம் புனுகுண்டாமோ
குக்கனே குக்கனல்லால் குலந்தனில் பெரியதாமோ.

* குக்கன் = நாய்.

கோவிந்த சதகம்.

அன்புள்ளவர் இயல்பு.

மங்குலம்பதி னாயிரம்யோசனை மயில்கண்டு நடமாடும்
தங்குபானுநூ றாயிரம்யோசனை தாமரை முகம்விள்ளும்
திங்களாதவற் கிரட்டியோசனை யுறைத்திடு மரக்காம்பல்
எங்கணாயினும் அன்பரா யிருப்பவர் இதயம்விட்டகலாரே.

பன்றியின் இயல்பு.

பன்றியுடன் உறவாகப் பழகினல் பாற்பசுவின்
கன்றும் மலத்தைப் புசிக்குமென்பார் அக்கதைபோல்
சென்றுறவாடிக் கயவர்பின் னேதிரிந் தாலறிவு
குன்றும் வசைக்கிடமா மச்சுதாநந்த கோவிந்தனே.

தாயின் இயல்பு.

அடித்தமுதூட்டி வளர்த்திடுந் தாய்தன் அகமெலிவா
மிடித்திடி னும்பெற்ற பிள்ளைகளைக்கை விடலறியாள்
பொடித்தெழும் பிஞ்சு திரளாயும்பாரம் பொறுக்கும்படர்
கொடிக்கென்ன காய்கனமோ அச்சுதாநந்த கோவிந்தனே.

பத்திரகிரியார் புலம்பல்.

எண்ணாத தூரமெல்லாம் எண்ணியெண்ணிப் பாராமல்
கண்ணாடிக் குள்ளொளிபோல் கண்டறிவ தெக்காலம்.

காந்தம் வலித்திரும்பைக் கரந்திழுத்துக் கொண்டதுபோல்
பாய்ந்து பிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம்.

சூரிய காந்தவொளி சூழ்ந்துபஞ்சைச் சுட்டாற்போல்
ஆரியன் தோற்றத் தருள்பெறுவ தெக்காலம்.

பொன்னிற் பலவிதமாம் பூஷணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்துன்னி லொடுங்குவது மெக்காலம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1906.